# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஜனவரி 2003 ஜீவியம் 8 மலர் 9**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| *யோக வாழ்க்கை விளக்கம்* **IV** | **2** |
| *லைப் டிவைன்* | 14 |
| *இம்மாதச் செய்தி* | 24 |
| *அன்பர் கடிதம்* | 25 |
| *சாவித்ரி* | 30 |
| *அன்பரும் நண்பரும்* | 32 |
| *அபரிமிதமான செல்வம்* | 44 |
| *சரணாகதி சமாதியைக் கடந்தது* | 51 |
| *பிரார்த்தனை பலிக்க வேண்டும்* | 56 |
| *இலட்சியத் திருமணம்* | 61 |


☆ ☆ ☆

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

## யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**746) இறைவன் என்ற புதிருக்கு அவனே விடை. வாழ்வில் இறைவன் புதிர். அவனை அடைந்தால் விடை எழும்.**

*புதிரும் விடையும் அவனே.*

இறைவன் உலகை சிருஷ்டித்தவன். அவனே பிரம்மம். சர்வமும் பிரம்மம். அவனன்றி ஓரணுவும் அசையாது. இறைவன் ஆனந்தம். இறைவனே சத்தியம். எல்லாம் வல்லவன் இறைவன். எங்கும் நிறைந்தவன். எல்லாம் அறிந்தவன். கருணைக் கடல் என்பது கடவுள். அவன் திருவடி தரிசனம் பாபவிமோசனம், என்றெல்லாம் உலகம் அறியும். இவையெல்லாம் உண்மை என நாம் ஆழ்ந்து நம்புகிறோம்.

உலகை உற்பத்தி செய்த இறைவன் பூகம்பத்தையும் ஏற்படுத்துகிறான். எரிமலை வெடித்து இலட்சக்கணக்கான பேர் அழிகிறார்கள். பூகம்பம் பல நூற்றாண்டுகளாகச் சாதித்ததை, சில நிமிஷங்களில் தரைமட்டமாக்குகிறது. இதை ஏன் இறைவன் செய்கிறான், இதனால் இவனுக்கு என்ன வரும்? என்று நாம் சிந்திக்கத் தொடங்கினால், சிந்தனை நின்று போகிறது.

உலகம் உய்ய அவதாரம் எடுத்த இராமபிரானுக்கு வனவாசம் அமைகிறது, மனைவியை இராவணன் எடுத்துப் போனான். மனிதனுக்குள்ள அவலங்கள் எப்படி அவதாரப் புருஷனுக்கு வரும்? தர்மத்தை நிலைநாட்ட வந்த பரமாத்மா அதர்மத்தைத் தயக்கமின்றிக் கையாள்கிறார். ஏன் பரமாத்மா தர்மத்தைத் தாமே நிலைநாட்டக் கூடாது? எதற்கு அர்ஜுனனை நாடி, அவனுக்கு விஸ்வரூபத் தரிசனம் கொடுத்து, கீதோபதேசம் செய்து, அவனைப் போரிடச் செய்து, தர்மத்தை நிலைபெறச் செய்யவேண்டும். கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது போலல்லவா இருக்கிறது?



ஏசுபிரான் உலகைக் காக்க வந்தார். தன்னையே காத்துக்கொள்ள முடியவில்லையே. புத்தர் துன்பத்தை அழிக்க வந்தவர், ஞானோதயம் பெற்றபின் துன்பத்தை அழிக்கவில்லையே, துன்பமே இல்லை என்றல்லவா சொன்னார்.

வேதரிஷிகளை நாம் தெய்வம் என்கிறோம். அவர்கள் கடவுள்களை நோக்கி மாடு வேண்டும், மழை வேண்டும் என்றல்லவா கேட்கிறார்கள். புனிதமான வேதத்தைப் படித்து மாட்டைத்தான் கேட்கவேண்டுமா?

சத்திய ஜீவியத்தை உலகுக்குக் கொண்டுவந்து மரணத்தையும், வலியையும் அழிக்க பகவானும், அன்னையும் வந்தார்கள். அன்னை தாம் பட்ட வேதனையைப் பார்த்து இந்த யோகத்தை எவரையும் செய்யும்படி நான் கூறமாட்டேன் என்றார். பகவான் பட்டதை நினைத்தால் கண்கள் நீரால் நிறைகின்றன என்றார். இறைவனான பகவானே நேரில் வந்து யோக இரகஸ்யங்களைக் கூறியபொழுது எவராலும் பின்பற்ற முடியவில்லையே.

பெற்ற குழந்தையைக் கொலை செய்யும் பெற்றோரை எப்படி இறைவன் உலகில் சிருஷ்டிக்க முடியும்? இது என்ன புதிர்? உலகில் இன்றுள்ள ஆயிரம் கொடுமைகளுக்கு அவனேயல்லவா பொறுப்பு. ஏன் ஓர் உலகத்தை சிருஷ்டித்து, அதில் துன்பத்தை ஏற்படுத்தி, பிறகு அங்கு அவதாரம் செய்து, பின் அத்துன்பத்தை அழிக்க வழி சொல்லி, தாமே துன்பத்தை அனுபவித்து, உலகை அப்படியே துன்பவலையில் விட்டுப் போக வேண்டும் இறைவன்? இது ஒரு புதிரல்லவா? என்ற கேள்வி ஞானிகட்கும், மேதைகட்கும், விஞ்ஞானிகட்கும், எல்லோருக்கும் தோன்றுகிறது.

**இறைவன் புதிரல்லன்,**

**வாழ்வில் நாம் இறைவனைப் புதிராகக் காண்கிறோம்.**

**வாழ்வை விட்டு சொர்க்கத்திற்குப் போனால் இறைவன் புதிராக இல்லை.**

**வாழ்வை நீத்து மோட்சத்திற்குப் போனாலும் இறைவன் புதிர் இல்லை என்பது தெரியும்.**

**இறைவன் மனிதனுக்குப் புதிர், ஞானிக்குப் புதிர், பூரணயோகிக்குப் புதிரல்லன்.**

**பூரண யோகிக்கு உலகம் ஓர் அற்புதம், இறைவன் அனந்தமான ஆனந்தம்.**

**மனிதனை இறைவனாக்க வந்த யோகம் பூரண யோகம்.**

**மனிதன் இறைவனாக முடியும் என்று பகவான் எழுதினார்.**

**தம் யோக நிலையை இறைவன் நிலைக்கு உயர்த்தினார்.**

**தாமே இறைவனானார்.**

**அனைவரும் இறைவனாகும் மார்க்கத்தை வகுத்தார்.**

**அதை உலகுக்கு அறிவித்தார்.**

அவனை நாம் அடையமுடியும். அவனாக நாம் ஆக முடியும். ஆனால் புதிர் புதிராக இருக்காது. புதிரானது அற்புதமாக மாறும். புதிருக்கு விடை அவனே. அவனே புதிர். அதற்கு விடையும் அவனே. அவனை அடைந்து, அவனாக மாறி, புதிரை விண்டு, அற்புதமாகக் கண்டு, திருவுருமாறுதல் பூரணயோகம். பூரணயோகம் அவனையடைய உதவும் என்ற பகவான், யோகமும் அவனே, யோகசித்தியும் அவனே என்றார்.

பணத்தின் இரகஸ்யம் என்ன என்று தேடுபவர்கட்குப் பணத்தைச் சம்பாதித்தவர்கள் சொல்லும் விடை, ‘‘உழைப்பு’’. பிரபலமடைய விரும்புபவர் அநேகர் நல்ல குணமும், திறமையும், பிரபலத்தைத் தரும் என்று அவர் அறியும்பொழுது பிரபலம் என்ற புதிருக்கு விடை நாணயம் என்றறிகிறார்.

பகவான், இறைவன் ஒரு புதிர், இதற்கு விடை “இறைவனாகும்” என்று கூறும் பதில் மற்றொரு புதிராக அமைகிறது. வாழ்வில் உள்ள இலக்குகள் பணம், பதவி, புகழ், பெண், போன்றவை வாழ்வின் பல



பகுதிகளாகும். வாழ்வென்பதே சிருஷ்டியில் பகுதி. இறைவன் என்ற முழுமையில் வாழ்வு பகுதியாகும்.

பகுதியான ஒரு திறமைக்கு அல்லது இலக்கிற்கு விடை அதன் வெளியே அமைய முடியும். இறைவன் என்பது சிருஷ்டியைக் கடந்த முழுமை.

ஜீவாத்மா பரமாத்மாவை அடைந்து மோட்சம் பெற்றால் ஜீவாத்மா என்ற பகுதி பரமாத்மா என்ற முழுமையை அடைகிறது என்று தெரியும். பரமாத்மா என நாம் கூறுவதே இறைவனின் பகுதியாகும்.

***இறைவன் என்பது பிரம்மம்.***

***அது முழுமுதற் கடவுள் எனப்படும்.***

***அதன் முழுமை சிதறாது, சிதையாது.***

***சிருஷ்டியால் இறைவனின் முழுமை குறைவதில்லை.***

முழுமையான இறைவன் என்ற புதிருக்கு பகுதியான உபாயம் விடையாக இருக்கக்கூடாதா எனலாம்?

பகுதியான உபாயம், இறைவனை அடைய உதவலாம், இறைவனாக உதவாது. அப்படி அடைந்தால் புதிர் புதிராகவேயிருக்கும், விடை வெளிவாராது.

இறைவனை அறிய இறைவனாவது தவிர வேறு வழியில்லை என்பதால் இறைவன் என்ற புதிருக்கு இறைவனே விடை என்றார் பகவான்.

- ***இறைவன் என சச்சிதானந்தத்தைக் கூறுகிறோம்.***
- ***இறைவன், பிரம்மம் என்பது, சச்சிதானந்தத்தைக் கடந்தது.***
- Unmanifest ***என்ற நிலையைப் பரவெளி எனக் குறிப்பிடுகிறார்கள்.***
- ***சச்சிதானந்தம்*** manifest ***சிருஷ்டியின் பகுதி.***

❋ சச்சிதானந்தமும், சிருஷ்டியும் இறைவனின் பகுதிகள்.

❋ சிருஷ்டியில் வெளிப்படும் இறைவனே முழுமையுடையவன்.

✯ ✯ ✯

**747) இதையே மற்ற எதற்கும் சொல்லலாம். அன்பின் பிரச்சினைக்கு அன்பே விடை எனலாம். தன் குறையால் அன்பு பிரச்சினையை எழுப்புகிறது. குறையை நிவர்த்தி செய்தால் பிரச்சினை மறைகிறது.**

*புதிரான விடை, விடையான புதிர்.*

உலகில் அன்புக்கு ஏங்குபவருண்டு, அவருக்கு அன்பு ஒரு புதிர்.

பணத்திற்காக அலையும் பணக்காரருண்டு, பணம் அவருக்கு ஒரு புதிர்.

பதவிக்காக உயிர் வாழ்பவர் உண்டு, பதவி அவரை ஏமாற்றும் பொழுது அதை ஒரு புதிராகக் காண்கிறார்.

பிறருக்காகவே வாழ்ந்தவர் நன்றி கொல்வதையே பார்க்கிறார், அவருக்கு மனித சுபாவம் ஒரு புதிர்.

போரில் ஏற்படும் எதிர்பாராத திருப்பங்கள், பொதுச் சேவையில் எழும் புரியாத நிலைகள், அவற்றைப் புதிராகக் காண்கின்றனர்.

விஞ்ஞானி உலகத்தையே ஆண்டாலும், உலகத்தின் சிருஷ்டி அவனுக்குப் புதிராகவே இருக்கிறது.

இறைவன் மட்டும் புதிராக இல்லை. அவன் சிருஷ்டியில் அனைத்தும் புதிராகவே உள்ளன.

**புதிர் என்றால் என்ன? அதற்கு விடை எப்படிக் கிடைக்கிறது?**

புரியாதது புதிர். பிறர்க்குப் புரிந்து நமக்குப் புரியாதது, புரியாதவர்க்கு மட்டும் புதிராகும். எவர்க்கும் புரியாதது எல்லோர்க்கும் புதிர். விடுகதை புரியும்வரை புதிராக இருக்கிறது. புரிந்தபின்



எளிமையாகிவிடுகிறது. புரிந்தபின் கிடைக்கும் எளிமையை, புரிவதன்முன் பெற வழியிருந்தால் புதிர் என்பதன் தன்மை குறையும், விடை காண்பதின் சிரமம் குறையும்.

பகுதியை முழுமையாகக் கருதினால் அது புதிராகிறது.
பகுதியை முழுமையிலிருந்து பார்த்தால் புதிர் அவிழ்கிறது.

கர்நாடகமும், தமிழ்நாடும் தங்கள் நலனை மட்டும் கருதினால் காவிரி நீர் பிரச்சினையாகிறது. நாட்டுடன் நம்மை இணைத்து நாட்டுப் பிரச்சினையாகப் பார்த்தால், அது பிரச்சினையாகாது. மாமியாரைப் பற்றி அனைவரிடமும் குறை சொல்லும் மருமகளும், மருமகளைப் பற்றி குறை சொல்லும் மாமியாரும், குடும்பத்தின் பேர் கெடக்கூடாது என நினைத்தால் குறை சொல்ல மாட்டார்கள். பணத்தைப் பணமாகக் கருதி அதை நாடினால் - பகுதியாகக் கருதினால் - பணம் ஓடுகிறது. மனிதனுடைய திறமையின் ஒரு வெளிப்பாடு பணம் என நினைத்தால் பணம் புதிராக இருப்பதில்லை. அவனை நாடி வரும்.

விதையிலிருந்து மரம் எழுந்தால், மரத்தை விதை விளக்குகிறது, விதையை மரம் விளக்குகிறது. ஆனால் எப்படி என்று விளக்க முடியவில்லை. அவை புதிராகின்றன. சிருஷ்டியின் பகுதியாக விதையையும், மரத்தையும் கருதினால் அவையிரண்டும் உற்பத்தியான வகையை சிருஷ்டி விளக்குவதால் புதிர் புரிகிறது என்கிறார் பகவான்.

அன்பை நாடிப் போகிறவர்களைவிட ஆசையை நாடுபவர்கள் அதிகம். ஆசை சில சமயங்களில் பூர்த்தியாகும், பல சமயங்களில் பூர்த்தியாகாது. ஆனால் அன்பைத் தேடிய எவருக்கும் உலக வாழ்வில் அன்பு பூர்த்தியானதில்லை. அது புதிராகவேயுள்ளது. I have loved since my birth, no one loved me. பிறந்ததிலிருந்து அன்பு செலுத்தினேன், அதை எவரும் திருப்பித் தரவில்லை என்பது ‘சாவித்ரி’ காவியத்தில் ஒரு வாக்கியம். Vision of Dante டான்தேயின் திருஷ்டி என்பது உலகப் பெருங்காவியம். டான்தே பியாட்ரிஸ்

என்பவளை விரும்புகிறான். அவள் மற்றொருவனை திருமணம் செய்து 9 குழந்தைகள் பெற்றபின் அவள் மீதுள்ள அன்பு அனலாக எழுந்து காவியமாக மாறியது. இது இத்தாலியக் காவியம். ஏன் அன்பு புதிராகவேயுள்ளது?

ஓர் இளம் பெண் புத்த பிக்ஷுவைப் பார்த்து அவனை விரும்பி அவன் பின்னால் போகிறாள். அது பலன் தாராது என்றறிந்தபின் விரக்தியடைந்து தன்னை அழித்துக்கொள்கிறாள். விபச்சாரியாகி தீராத வியாதியடைந்து அலைந்து மயக்கமடையும்பொழுது அந்த பிக்ஷு அவளைக் கண்டு, வாரி எடுத்து, மடியில் போட்டு, ஆறுதல் கூற முயலும்பொழுது, அவள் கண் விழித்து, "அன்றே இதை செய்திருந்தால் நான் அழிந்திருக்கமாட்டேன்" என்கிறாள். உடலின் தேவையை அன்பு என்று கருதுபவர் பாமரர். உணர்வின் உயர்வை உலகம் அன்பு என்றறியும். அது சில சமயங்களில் பலிக்கும், பல சமயங்களில் பலிக்காது. பலித்தபின்னும் அதனுள் அன்பு இருப்பதில்லை. அதனால் டான்தேயின் அன்பு உட்பட அன்பு இன்றுவரை புதிராகவேயுள்ளது.

அன்பின் உறைவிடம் உணர்ச்சி என நாம் அறிந்தாலும், அன்பு உணர்ச்சிக்குரியதன்று. ஆங்கிலத்தில் sensation என்ற உணர்ச்சியே அது. Feeling, emotion என்று கூறப்படும் உணர்ச்சிகள் இதயத்திற்குரியவை, இவை அன்பல்ல. இவை தாழ்ந்த (sensation), உயர்ந்த (emotion) உணர்ச்சிகள். God is Love என்று நாம் கூறும் Love அன்பை மனதில்கொண்டு, அதை நாம் உலகில் தேடி அலைந்து அது புதிராக உள்ளது என்கிறோம். அந்த Love அன்பு எப்படி உற்பத்தியாகிறது என்று Life Divineஇல் பகவான் எழுதுகிறார். அது சச்சிதானந்தத்தில் எழுகிறது.

**சத்(தியம்), சித்தம், ஆனந்தம் என்பது சச்சிதானந்தம்.**

சத் என்பது பிரம்மம், புருஷன், ஈஸ்வரன் எனவும்,

சித் என்பது ஞானம் (knowledge), செயல்திறன் (will) எனவும்,



ஆனந்தம் என்பது அன்பு, சந்தோஷம், அழகு (Love, Joy, Beauty) எனவும் பிரிகின்றன என்கிறார்.

ஆனந்தம் உடலில் வெளிப்பட்டால் அது அழகாகிறது.

ஆனந்தம் நரம்பில் வெளிப்பட்டால் அது சந்தோஷமாகிறது.

ஆனந்தம் ஆன்மாவில் வெளிப்பட்டால் அது அன்பாகிறது என்பது தத்துவம்.

ஆன்மா முழுமையானது. அன்பு அதன் உருவம். இதயமும், நரம்பும், உடலும் பகுதிகள். பகுதிகளிலிருந்து அன்பைப் புரிந்துகொள்ள முயன்றால் அது புதிராக இருக்கும். ஆன்மா என்ற முழுமையிலிருந்து அன்பைப் புரிந்துகொள்ள முயன்றால், அன்பு தானே சுரக்கும், எதிர்பார்ப்பின்றி ஓடையாக ஊறி ஓடும். தன்னை அர்ப்பணிப்பதிலேயே அன்பு பூரணத்தைப் பெறும். பிரதிபலன் எதிர்பார்க்காது, தன்னை ஏற்கவேண்டும் எனவும் எதிர்பார்க்காதது தூய அன்பு என்கிறார் அன்னை.

மனித முழுமையை நாடி அதன் பகுதியாகப் பணத்தைக் கண்டவருக்குப் பணம் புதிரன்று. அவர்கள் பணத்தைச் சம்பாதித்தவர் மட்டுமல்லர், பணத்தை உற்பத்தி செய்தவர்கள். பாங்குகளை நிறுவி நாட்டில் பெரும் பணத்தைச் சேர்த்து பலருக்கும் பணத்தின் சேவையைக் கிடைக்கும்படிச் செய்தவர்கள். அவர்களுக்குப் பணம் ஒரு கருவி, புதிரன்று. பணம் எங்கு உற்பத்தியாகிறது, எப்படி உற்பத்தியாகிறது என்று கண்டவர்கள் அவர்கள். அதனால் ஆலைகளையும், பாங்குகளையும், பெரிய ஸ்தாபனங்களையும், இன்ஷூரன்ஸ் கம்பனிகளையும் நிறுவி பணத்தை உற்பத்தி செய்தனர். அவர்கள் பணத்தை முழுமையானதாகக் கருதவில்லை. மனிதன் என்ற முழுமையில் கடமை, திறமை, காரியம், செயல், உழைப்பு என்பவை பகுதிகள். அவற்றின் பலனாக எழுபவற்றுள் பணமும் ஒன்று என்று கண்டனர். They are nation builders அவர்கள் சமூகச் சிற்பிகள். சமூகத்தை உருவாக்கியவர்கள். பணத்தைக் கருவியாகக் கருதியவர்கள்.

பதவி சேவைக்குரிய கருவி. எனவே சேவையின் பகுதி. பகுதியான பதவியை மனம் நாடும்பொழுது, பதவி தூரப் போகிறது, புதிராக இருக்கிறது. வாழ்நாள் முழுவதும் உழைத்தவனைவிட்டு இன்று வந்தவனை நாடுகிறது. பணத்தாலோ, சாமர்த்தியத்தாலோ அடுத்தவர் பெறும்பொழுது எதுவும் புரிவதில்லை. பதவியை நினைக்காமல் முழுமையாகச் சேவையை மட்டும் கருதியவரை பதவி தேடி வருவது சரித்திரம். அந்நிலையில் பதவி புதிராக இருப்பதில்லை.

மனிதச் சுபாவத்திற்குத் தன்னைப் பூர்த்தி செய்துகொள்வதே பாங்கு. நன்றியறிதல் அதன் பகுதியில்லை. நன்றியறிதல் மனித சுபாவத்திற்குத் தேவையில்லை. சுயநலமான மனிதன் இப்பிறவியில் சுயநலத்தின் பூரண அனுபவத்தைப் பெற வந்திருக்கிறான். அவனுக்குச் சுயநலம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் எதுவும் தேவையில்லை. நன்றியறிதலும் தேவையில்லை, ஏமாற்று வித்தையும் தேவையில்லை. முனிசிபாலிட்டியில் வேலை செய்பவன், தன் கடமையை முனிசிபாலிட்டியில் செய்கிறான். அவன் பள்ளியில் பாடம் சொல்லிக் கொடுக்கவில்லை, நிலத்தில் பயிரிடவில்லை எனக் குறை சொல்வது அவனைப் புரிந்துகொள்ளவில்லை என்று பொருள். கோபமான சுபாவமுள்ளவனுக்கு முக்கியமாகக் கோபமும், வாழ்வுக்குத் தேவையான மற்ற குணங்களும் வேண்டும். பொறுமையோ, கருணையோ, ஏமாற்றுவதோ, அவனுக்கு இப்பிறவியில் தேவைப்படாவிட்டால், அவற்றை அவன் நினைக்கப் போவதில்லை. பொதுவாக மனிதன் வாழும் வாழ்வுக்கு, கருணை, நன்றியறிதல் தேவையில்லை.

***மனித வாழ்வுக்கு நன்றியறிதல் அவசியம் என நினைப்பது சரியில்லை.***

ஒரு குறிப்பிட்ட சுபாவத்திற்குப் பல குணங்கள் தேவைப்படலாம். பல தேவைப்படா. தேவைப்படும் குணங்களை விலக்கினால் காரியம் பூர்த்தியாகாது. தேவைப்படாத குணத்தைச் சேர்த்துப் பார்த்தால் விஷயம் புரியாது. சுபாவத்தை சுபாவமாகப் புரிந்துகொள்ள முயன்றால்



ஏன் நன்றியறிதல் தேவை, சில சமயங்களில் தேவையில்லை என்று புரியும்.

விதை எப்படி மரமாக வளர்கிறது என்பதை முழுவதுமாகக் கண்டுகொண்ட விஞ்ஞானி விதையைக் கொண்டு மரத்தை அறிகிறான். விதையும், மரமும் ஏற்பட்ட காரணத்தை விதையிலிருந்து கண்டுபிடிக்க முயல்வது அறிவீனம். மார்க்கட்டில் சோப் விற்கிறதெனில் வாங்குபவர்களைக் கொண்டு, அவர்கள் வாழ்க்கையை ஆராய்ச்சி செய்து, சோப் எப்படி உற்பத்தியாகிறது என அறிய முடியாது. சோப் பேக்டரியில் உற்பத்தியாகிறது, கண்டுபிடித்தவன் விஞ்ஞானி. சோப்பின் உற்பத்தியை அறிய பாக்டரிக்கும், விஞ்ஞானியிடமும் போகவேண்டும். வாங்குபவர் பின்னால் வந்தவர். பின்னால் ஏற்பட்டதை ஆராய்ந்து முன்னால் நடந்ததை அறிய முற்படுவது இயலாது, மூடநம்பிக்கையாகும். மரம் விதையிலிருந்து வருகிறது, விதை மரத்திலிருந்து எழுகிறது. மீண்டும் மீண்டும் அதே கேள்வி, அதே பதில். விடை அங்கில்லை. விதையும், மரமும் உலகத்தின் பகுதிகள். பகுதியால் தன்னை உணரமுடியாது, முழுமை பகுதியை விளக்கும்.

போர் சர்க்கார் தொடுப்பது. சர்க்கார் சமூகத்தின் பகுதி. சமூகம் புரிந்தால் போரின் நுணுக்கங்கள் புரியும். ரஷ்யா மீது படையெடுத்த நாடுகளெல்லாம் ரஷ்யரிடம் மாட்டித் தோற்றன. ரஷ்யக் குளிர் கடுமையானது என்று புரியாமல் போரை எப்படி நடத்துவது என்ற நுணுக்கம் போரில் வெற்றியைப் பெற்றுத் தாராது.

அழகான பெண்கள் எளிதில் திருமணமாவதுண்டு. வசதியில்லாத அழகான பெண்ணுக்கு திருமணம் தள்ளிப்போகும். அழகு உயர்ந்தது என்றாலும் திருமணம் செய்துகொள்ள வசதி தேவை என்பதை மறந்துவிட்டால், காரியம் பூர்த்தியாகாது. தன் வசதியைக் கொண்டு தன் திருமணத்தைக் கணித்த பெண்ணுக்கு, தனக்கு திருமணமாகாது என்று புரிந்தபோது, இதுவரையில்லாமல் வரன் வந்தது. விஷயங்கள் விநோதமாக மாறி, பணம் செலவில்லாமல்

இரண்டு கல்யாணமும், ஓர் உபநயனமும் நடந்தன. அழகு பகுதி, வசதி திருமணத்திற்கு முழுமை. முழுமையை அறியும் மனத்திற்குத் திறன் உண்டு. பிரச்சினை புதிராக இருக்காது.

**புதிராகக் காண்பது பகுதியின் அறிவு.**

**முழுமையை நாடினால் புதிர் மறையும்.**

**வாழ்வில் இறைவன் புதிராக இருக்கிறான்.**

**இறைவனில் வாழ்வு புதிரை இழந்து தெளிவாகிறது.**

வேலை, திருமணம், படிப்பு, ஆகியவை முக்கியமானவை. சில சமயங்களில் வேலையில் குறை ஏற்படும். அது திருமணத்தால் ஈடு கட்டப்படும். ஒன்றில் ஏற்படும் குறையை சில சமயங்களில் வாழ்வு மற்றதால் ஈடு கட்டும். அவை வாழ்வின் பகுதிகளாக இருப்பதால் ஒரு பகுதி அடுத்ததின் குறைவை ஈடுகட்டலாம்.

அன்பு முழுமை பெற்றது. அதனளவில் முழுமை பெற்றது எனலாம். தாயன்பு இல்லாவிட்டால் அக்குறையை தீர்க்கவோ, ஈடுகட்டவோ முடியாது. அங்கு அன்பின் பிரச்சினைக்கு அன்பே விடை எனக் கூறலாம்.

படிப்பால் ஏற்படும் குறைவை வேலை அல்லது திருமணம் ஈடுகட்டுவதுண்டு. அறிவால் ஏற்படும் குறையை அதுபோல் ஈடுகட்ட முடியாது.

**படிப்பைப் பகுதியாகக் காணலாம்.**

**அறிவு முழுமையுடையது.**

ஆன்மாவின் அம்சங்கள் எதுவும் அதுபோல் முழுமையுடையன. சத்தியம், ஞானம், நன்மை, உறுதி, அழகு, ஆனந்தம், அன்பு, மௌனம், அனந்தம், காலத்தைக் கடந்த நிலை ஆகியவை ஆன்மாவின் அம்சங்கள்.



சத்தியம் என்பதை Truth என்றால் அதன் பகுதியான fact உண்மை நிகழ்ச்சி எனலாம்.

ஞானம் என்பதை முழுமையுடையது என்றால் பட்டம், படிப்பை பகுதி எனலாம்.

நன்மை முழுமை எனில் நல்ல செயலை (உதவி) பகுதி எனலாம்.

| **முழுமை** | **பகுதி** |
|---|---|
| உறுதி | வாக்குறுதி |
| அழகு | அழகி |
| ஆனந்தம் | சந்தோஷம் |
| அன்பு | ஆதரவு |

**வாழ்வில் முழுமையை முழுமையாலே அடையலாம். பகுதி ஒன்று தவறினால் அடுத்ததைக் கொண்டு பிரச்சினையைத் தீர்க்கலாம்.**

**இறைவன் என்ற புதிருக்கு அவன் மட்டுமே விடையாகும் என பகவான் எழுதியதின் உட்கருத்து இதுவாகும்.**

★ ★ ★

*தொடரும்....*

**ஜீவிய மணி**

பிரியத்தின் கண்ணுக்கு விகாரம் அழகாகத் தெரியும்.

"ஸ்ரீ அரவிந்தம்''

லைப் டிவைன்

கர்மயோகி

## XI. Delight of Existence : The problem

*Page No. 94*
*Para No. 7*

**Sachchidananda is God.**
**That is our reason.**
**God is the author of existence.**
**How can God create pain?**
**How can he inflict it on his creatures?**
**How can he sanction pain?**
**By what reason does He permit evil?**
**God is All-Good.**
**Who then created pain and evil?**
**We say pain is a trial.**
**We say it is an ordeal.**
**That does not solve the moral problem.**
**It makes God immoral or non-moral.**
**We make God an excellent world-mechanist.**
**He then becomes a cunning psychologist.**

**He is then not a God of Good or Love.**
**We can worship a God of Love.**
**Now He is a God of Might.**
**We must submit to the law of Might.**
**He is known for his caprice.**



## 11. ஆனந்தம் - கேள்வி

**சச்சிதானந்தம் கடவுள்.**
**அதுவே நம் அடிப்படை.**
**கடவுள் சிருஷ்டிக்கர்த்தா.**
**கடவுள் எப்படி துன்பத்தை சிருஷ்டி செய்ய முடியும்?**
**அவனுடைய படைப்புக்கு எங்ஙனம் அவன் வலி தருவான்?**
**வலிக்கு அனுமதி தர அவன் முன் வருவானா?**
**எந்தக் காரணத்தால் இறைவன் கொடுமையை அனுமதிப்பான்?**
**கடவுள் நல்லவர்.**
**அப்படியானால் யார் வலியையும், தீமையையும் உற்பத்தி செய்தது?**
**வலி ஒரு சோதனை என்று கூறலாம்.**
**வேதனை என்றும் கூறலாம்.**
**அது தர்மத்தை விளக்குமா?**
**கடவுள் தர்மத்திற்குப் புறம்பானவர், அதர்மமானவர் என்றாகாதா?**
**நாம் கடவுளை உயர்ந்த மெக்கானிக்காக்குகிறோம்.**
**இது உண்மையானால், கடவுள் திருட்டு மனப்பான்மையுடையவர் என்றாகும்.**
**அப்படியானால் கடவுள் அன்புருவானவரில்லை.**
**நாம் அன்பை வணங்கலாம்.**
**இக்கடவுள் வலிமைமிக்கவர்.**
**பலத்திற்குப் பணியவேண்டும்.**
**ஆண்டவன் அவனிஷ்டம்போல் நடப்பான்.**

He may propitiate his caprice.

This God has invented torture and cruelty.

Torture, for him, is a means of test or ordeal.

It means He is deliberately cruel.

Or, He is morally insensible.

He stands convicted of either.

He may be a moral being.

Then He is inferior to the highest instincts of men.

There is a desire to escape this obstacle.

It is a moral difficulty.

Therefore, we say pain is an inevitable result.

It is a natural punishment for evil.

Moral evil attracts punishment.

We may say so, but it is not true.

It will be true only if we accept karma.

Not only karma, we must accept rebirth also.

This is not a true explanation.

Facts do not bear it out.

The Soul suffering now for previous sins is karma.

The sin was committed in other bodies.

An ethical question is yet to be answered.

Who created evil?

Why was it created?

For what reason was it created?

These questions must first be answered.

Of course, evil entails punishment and suffering.



அதற்கும் நாம் துதிபாடவேண்டும்.

இக்கடவுள் கொடுமையையும், சித்ரவதையையும் சிருஷ்டித்தது.

கொடுமை, சோதனை, வேதனை.

வேண்டுமென்றே ஆண்டவன் கொடுமை செய்வதாகிறது.

கடவுளுக்கு மனச்சாட்சியில்லை என்றாகும்.

இரண்டில் ஒன்றை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கடவுள் தர்மதேவதையாக இருக்கலாம்.

இது உண்மையானால் ஆண்டவன் மனிதனைவிடத் தாழ்ந்தவன் என்றாகும்.

இந்த இக்கட்டிலிருந்து மீள விரும்புகிறோம்.

இக்கட்டு மனச்சாட்சிக்கு.

எனவே வலி தவிர்க்கமுடியாதது என்கிறோம்.

கொடுமை பெறும் தண்டனை வேதனை என்று கூறுகிறோம்.

கொடுமை தண்டிக்கப்படவேண்டுமல்லவா?

நாம் இவற்றையெல்லாம் கூறலாம். ஆனால் அவை உண்மையில்லை.

கர்மத்தை ஏற்றால் இவை உண்மையாகும்.

கர்மத்துடன், புனர்ஜென்மத்தையும் ஏற்கவேண்டியிருக்கும்.

இது சரியான விளக்கமன்று.

நடைமுறையில் இது சரியாகத் தெரியவில்லை.

போன ஜென்மப் பாவத்தை இன்று அனுபவிப்பது கர்மம்.

வேறு உடலில் கடந்த ஜென்மங்களில் செய்யப்பட்ட பாவம் இவை.

மனச்சாட்சிக்கு விளக்கம் இதுவரை கிடைக்கவில்லை.

யார் கொடுமையைச் சிருஷ்டித்தது?

ஏன் அதை சிருஷ்டித்தனர்?

என்ன காரணத்திற்காக அதை சிருஷ்டித்தனர்?

முதலில் இக்கேள்விகட்கு விடை தேவை.

கொடுமைக்கு வேதனை தண்டனையாகக் கிடைப்பது நியாயம்.

**Moral evil is a mental disease.**

**It is an ignorance.**

**It is a form of ignorance.**

**Who created it? Or what created it?**

**What was the inevitable connection between the act and punishment?**

**The tortures are often extreme.**

**They are monstrous.**

**The law of karma is inexorable.**

**It is irreconcilable with God.**

**God is a supreme moral Deity.**

**God is a personal Deity.**

**Buddha had a clear logic.**

**He denied the existence of God.**

**God was an all-governing Person.**

**He was free of everything.**

**Buddha denied personality.**

**To him, it was a creation of ignorance.**

**It is subject to karma, said Buddha.**

*Page Nos. 94 & 95*
*Para No. 8*

**This difficulty arises from an assumption.**

**That assumption is God is extra-cosmic.**

**Buddha denied God.**

**We present the difficulty sharply.**

**There will be no difficulty if God is not extra cosmic.**

**God may become the universe.**



**கொடுமை மனத்தின் வியாதி.**

**அது ஒருவகை அறியாமை.**

**அது அறியாமையின் ஆன்மீகச் சொரூபம்.**

**யார் அதை சிருஷ்டித்தனர்? எது சிருஷ்டித்தது?**

**செயலுக்கும், தண்டனைக்கும் தவிர்க்கமுடியாத தொடர்பு எப்படி ஏற்பட்டது?**

**சித்ரவதைகள் எல்லையைக் கடந்தவை.**

**ராக்ஷஸ வதம் அவை.**

**கர்மம் என்பது கடவுளையும் கட்டுப்படுத்தும்.**

**தெய்வமும், கர்மமும் ஒத்துவாரா.**

**கடவுள் உன்னதமான நியாயமானவர்.**

**தெய்வம் நாம் வணங்கும் குலதெய்வம்.**

**புத்தர் ஞானம் தெளிவானது.**

**புத்தர் கடவுளில்லை என்றார்.**

**கடவுள் அனைத்தையும் நடத்துபவர்.**

**கடவுள் எதற்கும் கட்டுப்பட்டவரில்லை.**

**சுபாவம் என்பதை புத்தர் மறுத்தார்.**

**சுபாவம் என்பதை அறியாமை ஏற்படுத்தியது என்றார்.**

**புத்தர் சுபாவத்தை கர்மத்தின் குழந்தை என்றார்.**

**நம் நினைவால் இப்பிரச்சினை எழுகிறது.**

**கடவுள் உலகைக் கடந்தவர் என்பதால் வரும் பிரச்சினையிது.**

**புத்தர் கடவுளில்லை என்றார்.**

**பிரச்சினையை நாம் தெளிவாக எடுத்துக் கூறுகிறோம்.**

**கடவுள் உலகைக் கடந்தவர் எனக் கூறாவிட்டால், பிரச்சினையில்லை.**

**கடவுளே உலகமாகலாம் அன்றோ!**

**He need not be one who created evil and suffering.**
**He need not stand above unaffected.**
**He, we assume, watches and rules.**
**He does His will.**
**He allows the world to be driven by His law.**
**He does not help his creatures.**
**Or, He helps them inefficiently.**
**He is not, then, omnipotent.**
**He is not all-good and all-loving.**
**This is the theory of an extra cosmic God.**
**He is moral.**
**Evil and suffering cannot, then, be explained.**
**By evil, we mean the creation of evil.**
**We can only do so by a subterfuge, a trick.**
**It will be unsatisfactory.**
**Surely, it will avoid the question.**
**It will not answer it directly.**
**It will imply Manicheanism.**
**It will practically annul the Godhead.**
**It will attempt to justify its ways.**
**Or, it will excuse God of his cruelty.**
**Such a God is not the Vedantic God.**
**Sachchidananda is one existence without a second.**
**All that is, is He.**
**He has embodied Himself in every creature.**
**If evil is there, it is He that bears evil and suffering.**



**கொடுமையை உற்பத்தி செய்தவராக இல்லாமலிருக்கலாம்.**
**உலகிலிருந்து விலகி நிற்காதவராக இருக்கலாம்.**
**நம்மைக் கண்காணித்து, ஆள்பவர் கடவுள் எனக் கொள்கிறோம்.**
**அவர் சித்தம் பலிப்பதாகக் கொள்கிறோம்.**
**தம் ஆட்சியை அவர் உலகில் நடத்துகிறார்.**
**மனிதர்கட்குக் கடவுள் உதவவில்லை.**
**அல்லது கடவுள் உதவி போதாது.**
**அப்படியானால், கடவுள் எல்லாம் வல்லவரில்லை.**
**கடவுள் அன்புருவானவரில்லை. நன்மையின் பிழம்பல்லர்.**
**உலகைக் கடந்தவர் இக்கடவுள்.**
**அவர் தர்ம தேவதை.**
**அதுவே உண்மையானால் கொடுமை, துன்பத்தை அறியமுடியாது.**
**கொடுமை என்றால் அது உற்பத்தியான வழி.**
**பதில் சொல்ல நாம் தந்திரத்தைப் பயன்படுத்தவேண்டும்.**
**அப்பதில் திருப்தியாக இருக்காது.**
**அது கேள்வியை விலக்கிப் பதில் கூறும்.**
**நேரடியான பதிலாக அது இருக்காது.**
**அசுரனும், ஆண்டவனும் மோதும் வழியது.**
**இப்பதில் கடவுளை மறுப்பதில் முடியும்.**
**கொடுமைக்காரக் கடவுள் சரி என அது கூறும்.**
**கடவுளின் கொடுமை கொடுமையில்லை என்று சொல்லும்.**
**இப்படிப்பட்ட கடவுள் வேதாந்தம் கூறும் கடவுளில்லை.**
**சச்சிதானந்தம் என்பது ஏகன்.**
**இருப்பனவெல்லாம் அவனே.**
**எல்லா ஜீவராசிகளிலும் உறைபவன் அவனே.**
**தீமையும், துன்பமுமிருந்தால், அவற்றை அனுபவிப்பவன் அவனே.**

**The problem then changes entirely.**

**Evil and suffering are the negation of bliss.**

**He is the sole infinite Existence-Consciousness-Bliss.**

**God is incapable of evil and suffering.**

**Our question is how did He admit evil and suffering into Bliss?**

**How God created suffering for His creatures is not the main question.**

**God is immune to evil.**

*Contd...*

✯ ✯ ✯

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜீவன் மலர்ந்து, உணர்ச்சி வயப்பட்டு, செயலோடு ஒன்றிய நேரம், மனிதனால் உச்சக்கட்ட சாதனையை எட்ட முடிகிறது. உலகத் தலைவர்கள் சிலரிடம் ஓரளவு இக்குணம் காணப்படுகிறது.

*உணர்ச்சி வயப்பட்ட செயலால் ஜீவன் மலர்ந்தால் சாதனை பெரியது.*



**பிரச்சினை அடியோடு மாறுகிறது.**

**கொடுமையும், வேதனையும் ஆனந்தத்தின் எதிரிகள்.**

**அவன் மட்டுமே உலகில் சத்-சித்-ஆனந்தமாக இருக்கின்றான்.**

**கடவுளால் கடுமை, கொடுமை, துன்பம், வலியை உற்பத்தி செய்யமுடியாது.**

**அவனது ஆனந்தம் எப்படிக் கொடுமையையும், துன்பத்தையும் அனுமதிக்கிறது என்பதே கேள்வி.**

**கடவுள் தம் ஜீவராசிகட்கு எப்படித் துன்பத்தை சிருஷ்டித்தார் என்பது முக்கியக் கேள்வியில்லை.**

**கடவுளை கொடுமை பாதிக்காது.**

*தொடரும்...*

✯ ✯ ✯

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தவத்தை நாடுபவர் குறைவு. இது ஆன்மீக சக்தியால் நடப்பது. மனிதனுடைய எல்லாச் சக்திகளையும் - மனம், உணர்வு, உடல் - சேகரம் செய்து மனத்திற்கு மேல் குவிக்கவேண்டும் என்பதால் இதை நாடுபவர் அரிபொருள்.

*பெரிய சக்தி தேவைப்படுவதால் சிறிய மனிதன் நாடாதது தவம்.*

## இம்மாதச் செய்தி

**Life Divine படித்தால் சந்தோஷம் அதிகமாகும்.**

**The more one understands The Life Divine, the more the atmosphere of fundamental joy grows strong.**



## அன்பர் கடிதம்

ஸ்ரீ அன்னையே நமஹ.
ஸ்ரீ அரவிந்தாய நமஹ.

ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்த மலரடிகளில் இதைத் தாழ்மையுடன் சமர்ப்பிக்கிறேன். நான் 13 வருடங்களாக வணங்கும் அன்னையின் அற்புதத்தை அன்னை பக்தர்கள் எல்லோருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் சென்னையில் ஓர் அரசாங்க அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். எனக்கு ஒரே ஒரு மகள்தான். 1989ஆம் ஆண்டு எனக்கு அன்னையைப் பற்றியும் அவரது மகிமைகளைப் பற்றியும் தெரியவந்தன. அன்றுமுதல் ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னையை என் குடும்பமே பூஜித்து வருகிறது. என் சொந்த வீட்டிலேயே இடம் இருந்ததால் ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் படங்களைப் பெரியதாக வைத்து மலர்கள் சமர்ப்பித்து வணங்கிவந்தோம். என் மகள் M.Com. படிக்கும்போதே bank exam எழுதினாள். வேறு எந்த உதவியுமின்றி அன்னையின் அருளால் அவளுக்கு Indian Bank வேலை கிடைத்தது. அதுவும் M.Com. பரீட்சை ஒரு subject எழுதும் தேதியில் அன்று வேலையில் சேரவேண்டுமென்றும் உத்தரவு கிடைத்தது. அன்னையிடம் சமர்ப்பித்தோம். இந்தக் காலத்தில் வேலை கிடைப்பதே கஷ்டமாதலால் எல்லோரும் பரீட்சையை October மாதம் எழுதும்படியும் உடனேயே வேலையை ஏற்றுக்கொள்ளும்படியும் சொன்னதால், அன்னையின் அருளும் அதுவாக இருந்ததால் அன்றே குறிப்பிட்ட தினத்தன்று பணியில் சேர்ந்தாள். அன்னை கொடுத்த முதல் பணியானதால் காஞ்சீபுரத்திற்குச் சற்றுத் தொலைவில் ஒரு கிராமத்தில் இருந்த வங்கியில் வேலையை ஒப்புக்கொண்டாள். வெகு தொலைவாக இருந்ததாலும், மூன்று பேருந்துகள் ஏறிச் செல்லவேண்டியதாலும் காலை 7 மணியளவில் புறப்பட்டுச்

செல்வாள். தினமும் அன்னையைப் பணிந்து அவரையும் தன்னுடனே வரும்படியும் கெஞ்சுவாள். நாங்கள் அடிக்கடி ஆசிரமத்திற்குச் சென்று வந்ததால் அந்தப் பிரசாத பாக்கெட்டையும், பாண்டி ஆசிரம மலர்களையும் தன்னுடனே வைத்துக்கொண்டு பிரயாணம் செய்துவந்தாள். அன்னையின் சக்தியால், கூட அவளுடன் பணி செய்த சக ஊழியர்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் ஒரே குடும்பம்போல் பணியாற்றினார்கள். அன்னையின் அருள் அவளுக்கு எல்லா உதவிகளையும் செய்தது.

இதற்கிடையில் அவளுக்குத் திருமணம் செய்யவேண்டும் என்று அன்னையிடம் சமர்ப்பித்தோம். ஒரு பரீட்சை அக்டோபர் மாதம் ஒரு நாள் எழுதவேண்டும். இடையிடையே அதற்காகப் படித்துக்கொண்டும் வந்தாள். பரீட்சை எழுத hall ticket வந்ததும், அண்ணா ஆதர்ஷ் கல்லூரியில் exam எழுத குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே சென்று காத்திருந்தாள். ஆனால் காலதாமதமாகியும் மற்ற மாணவிகள் அழைக்கப்பட்டும் இவளை principal அழைக்கவே இல்லை. கேள்வித்தாள் மற்றவருக்குக் கொடுக்கப்பட்டது. என் மகள் கல்லூரி முதல்வரிடம் சென்று hall ticket காண்பித்து கேட்டபோது யுனிவர்சிட்டியிலிருந்து இவளுக்கு எழுதவேண்டிய subjectஇன் கேள்வித்தாள் வரவே இல்லை என்று சொல்லிவிட்டனர். என்ன செய்வது என்று தெரியாமல் அழுதுகொண்டு அன்னையை நினைத்துக்கொண்டு 1 மணி 20 நிமிடம் அங்கே அமர்ந்து தியானம் செய்தாள். அந்தப் பரீட்சை ஏப்ரல் மாதம் அடுத்த வருடம் எழுதமுடியாது. ஏனென்றால் syllabus மாறிவிடும். என்ன செய்வதென்று தெரியாமல் அன்னையே இதில் என் முயற்சி எதுவும் இல்லை. நீங்கள் என்ன செய்யவேண்டுமென்று எண்ணுகிறீர்களோ அதையே நான் மனமுவந்து ஏற்றுக்கொள்கிறேன். உங்களிடம் இதையும் சமர்ப்பித்துவிட்டேன் என்று மனதார நினைத்ததும் என்ன ஆச்சரியம் என்றால் கல்லூரி முதல்வர் அழைக்கிறார் என்று attender வந்து அழைத்ததும் ஓடிச்சென்று பார்த்தால் கேள்வித்தாள் இரண்டு நாட்களுக்கு முன்பே வந்து அந்தக் கவரைப் பிரிக்காமல் ஒரு



பக்கமாக ஒதுக்கிப் போட்டிருக்கின்றனர் என்றும், இது அந்தக் கல்லூரி ஊழியர்களின் அஜாக்கிரதையால் நடந்தது என்றும் தவறுக்கு மன்னிப்புக் கேட்டு என் மகளை பரீட்சை எழுத அனுமதித்தார்கள். ஏற்கெனவே மூன்று மணி நேர பேப்பருக்கு 1½ மணிதான் இருந்ததால் அன்னையை வணங்கிவிட்டு எழுத ஆரம்பித்ததும் அன்னையே பக்கத்தில் நின்று பார்ப்பதுபோல உணர்ந்து ஒரு வினாடிகூட நிறுத்தாமல் வேகமாக எழுதும்போது குறிப்பிட்ட நேரம் நெருங்கிவிட்டது. மற்ற மாணவிகளிடம் பதில் தாள்கள் collect பண்ண வந்த ஆசிரியை இவள் நிலைமை தெரிந்து இன்னொரு பத்து நிமிஷம் அனுமதிக்கிறேன். முடிந்தவரை எழுது என்று சொன்னார்கள். ஆனால் இவள் அன்னையின் வழி நேர்மையாக நடக்கவேண்டுமென்று நினைத்து மற்ற மாணவிகள் கொடுத்த அதே நேரத்தில் பதில் தாள்களை கொடுத்துவிட்டாள். வீடு வந்து சேர்ந்ததும் நான் அலுவலகத்திலிருந்து திரும்பியதும் மனது ரொம்ப கஷ்டப்பட்டு எல்லாவற்றையும் சொல்லிக் கதறி அழுதாள். நானும் என் கணவரும் அவளைச் சமாதானப்படுத்தி உனக்கு என்ன நடக்கிறது, செய்யவேண்டும் என்பதெல்லாம் ஸ்ரீ அன்னைக்குத் தெரியும். கலங்காதே. என்னிடம் அழுவதைவிட்டு அன்னையிடம் கூறிவிடு என்றதற்கு அவள் எனக்குக் கொடுத்த காலகட்டத்தில் பாஸ் மார்க்காவது வரட்டும் என்று கிறுக்கி கிறுக்கி எழுதியிருக்கிறேன். அதை கரெக்ட் (correct) பண்ணும் ஆசிரியைக்கு ஒன்றுமே புரியாது அம்மா, அதுதான் பயமாக இருக்கிறது என்றாள். அன்னையிடம் சமர்ப்பித்துவிடு என்று தேற்றி அனுப்பினேன். Result வர ஒரு மாதம் ஆகியது. என்ன ஆகுமோ என்று எண்ணி எண்ணி மனம் பதைபதைத்தது. அன்னையிடம் வேண்டிக்கொண்டதும் பாஸ் பண்ணி 60% வாங்கிவிட்டாள் என்று நல்ல செய்தி வந்தது. நாம் எதிர்பார்க்காத இந்த அற்புதத்தை அன்னை எவ்வாறு நடத்தியிருக்கிறார் என்று கண்ணீர் மல்க அன்னைக்கு இன்றும் இதைச் சமர்ப்பிக்கிறேன். என் மனமார்ந்த நன்றியை மீண்டும் மீண்டும் சொல்கிறேன்.

அதற்குப்பின் 2 வருடங்கள் கழித்து நாங்கள் அலையாமலே மாப்பிள்ளை வீட்டார் வந்து கேட்டபோது மாப்பிள்ளைப் பையன் ரொம்ப நேர்மையானவன், Indian Overseas Bankஇல் பணிபுரிகிறான். நல்ல குடும்பம் என்று அறிந்துகொண்டோம். மேலும் எங்கள் சம்பந்திக்கும் எங்கள் ஊரே. திருமணம் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேல் விமரிசையாக அன்னை முன்னின்று நடத்தினார்கள். ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் படத்தை வைத்து ஆரம்பித்து கல்யாணம் இனிது முடிந்து இப்போது சந்தோஷமாக இருக்கிறாள். அன்னை அருளால் பிள்ளை பிறந்து அதற்குப் பெயர் அரவிந்த் என்று வைத்தோம். எப்போதெல்லாம் ஆசிரமம் போகமுடியுமோ அப்போதெல்லாம் சென்று வருகிறோம்.

இதற்கு மேலும் ஒரு அதிசயமான நிகழ்ச்சி நடந்தது. 16.9.2002 அன்று காலை 10.30 மணி அளவில் என் மகள் மாடியில் துணி துவைக்கக் கஷ்டமாக இருக்கிறது என்று கீழே வந்து குழாயடியில் அமர்ந்து துணியைக் கையில் வைத்து சோப்புப் போட்டுக்கொண்டு இருந்தாள். அவள் மாமனார் வெளியில் சென்றுவிட்டார். மாமியாரும் மாமனாரும் கீழே குடியிருக்கிறார்கள். மாமியார் பின்புறம் வேலையாக இருந்தார். மச்சினன் புஸ்தகம் வைத்துக்கொண்டு அவர்கள் வீட்டு உட்புறம் தாளிட்டு படித்துக்கொண்டிருந்தான். குழாய் வாசல் தோட்டத்தில் இருக்கிறது. இவள் ஏதோ பாடிக்கொண்டே துணியைக் கையில் எடுத்து சோப்புப் போடும்போது பின்புறம் இவள் முதுகில் ஏதோ பட்டென்று அடித்து இவளை முன்புறம் தள்ளுவதுபோல் கனமாக இருந்தது. முதுகில் வலப்புறம் தோளுக்குக் கீழ் இந்த உணர்வு ஏற்பட்டதும் இவள் தலையை கொஞ்சம் திருப்பி அதுவும் பக்கவாட்டில் பார்த்தால் 5 அடியிருக்கும் சாரைப் பாம்பு ஒன்று இவள் மேல் ஏறுகிறது. அதன் உடம்பும் வாலும் தரையில் இவள் அருகில் தெரிகிறது. அந்தப் பாம்பு ஏறிக்கொண்டே கழுத்தின் கீழ்ப்புறம் பின்பக்கம் வருகிறது. கீழே விழவும் இல்லை. உடம்பும் வாலும் தொடர்ந்து வருகிறதைப் பார்த்து திடுக்கிட்டு கண்ணை



மூடிக்கொண்டு சிறதுகூட அசையாமல் மூச்சையும் அடக்கிக்கொண்டு மூன்று நிமிடம் உட்கார்ந்தே இருந்தாள். அந்த சாரைப்பாம்பு தலையிலிருந்து கால் வரை இவள் உடலில் ஏறி இடப் பக்கமாக இறங்கி தோட்டத்து வழியாகச் சுவரில் ஏறி அடுத்த வீட்டுக்குள் இறங்கிவிட்டது. அதன் நீளத்தைப் பார்த்தபின் இவள் பயந்துபோய் பதறி கதவைத் தட்டியதும் அவள் மச்சினன் வந்து பார்த்து பாம்பைக் கண்டு பயந்து நின்று, தன் அம்மாவைக் கூப்பிட்டு பின் என் மகளை உள்ளே கூட்டிக்கொண்டு போய் தண்ணீர் கொடுத்து ஆசுவாசப்படுத்தினார்கள். இத்தனைப் பெரியதான நீளமான பாம்பு இவளை ஒன்றும் செய்யாமல் தானே இறங்கிப் போன நிகழ்ச்சி எல்லோருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. எப்படி இவள் அலறாமல் அமைதியாக இருந்தாள் என்பதும், எந்தத் தீங்கும் விளைவிக்காமல் அந்த சர்ப்பம் இறங்கி போனதற்கும் அன்னைதான் துணை இருந்தார்கள், இந்த அற்புதத்தைச் செய்தார்கள் என்பதையும் நான் முழுமையாக நம்புகிறேன். ஸ்ரீ அன்னையின்றி வேறு யாரும் என் மகளைக் காப்பாற்றி இருக்க முடியாது என்று நினைக்கும்போது எனக்குக் கண்ணீர் மல்குகிறது. என்னே அன்னையின் சக்தி என்று வியந்து ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் பாதங்களில் விழுந்து என் நன்றியை சமர்ப்பித்து மீண்டும் மீண்டும் வணங்குவதைத் தவிர நான் செய்வதற்கு வேறு ஒன்றுமே இல்லை. என்வசத்தில் எதுவும் இல்லை. அன்னையின் சக்தி, வலிமை எங்களைக் காக்கட்டும் என்ற நம்பிக்கையோடு இனியும் என் உயிர் உள்ளவரை அன்னை எங்களை வழி நடத்த வேண்டிக்கொள்கிறேன். என் மகள், பேரன், மாப்பிள்ளை, கணவர் எல்லோரையும் அன்னையிடம் சமர்ப்பித்துவிட்டேன். என்றும் அன்னை எங்களை வழி நடத்தட்டும். என் குடும்பம் முழுதுமே ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம்.

✯ ✯ ✯

## p.29 Air glowed and teemed with marvellous shapes and hues.

**வர்ணிக்கமுடியாத வர்ணஜாலங்களுடன்
காற்று ஜொலித்தது**

- ❐ **தெய்வ சுகந்தம் மூக்கைத் துளைத்தது.**
- ❐ **வையகத்தின் இன்பத் தேன் நாக்கில் சுவை சேர்த்தது.**
- ❐ **பிரபஞ்ச சுமுகம் ஊற்றாக வழிகிறது.**
- ❐ **மந்திரத்தால் கட்டுண்ட மக்கள் சாரிசாரியாய் வருகின்றனர்.**
- ❐ **புவியறியாத சூட்சுமச் சொல்லின் பாதை.**
- ❐ **உறக்கத்தின் ஜீவன் ஒளிந்துள்ள பாதை.**
- ❐ **ஒளிந்துள்ள சத்தியம் ஒலி எழுப்புகிறது.**
- ❐ **பிரபஞ்ச ஓட்டத்தின் பின்னணிப் படுகை.**
- ❐ **பிரம்ம ஞானத்தின் மௌனம் பிரதிபலிக்கிறது.**
- ❐ **உள்ளதை அறியும் உள்ளம் இரகஸ்ய உணர்வுள்ளது.**
- ❐ **இரகஸ்யத் தொகுப்பு கட்டி முத்திரையிடப்பட்டது.**
- ❐ **எட்டாத மோட்சத்தின் எதிர்கால கானம்.**
- ❐ **புவியின் பூர்த்தி பெறாத அபிலாஷைக் குரல்.**
- ❐ **அனைத்தையும் உட்கொண்ட அனந்த சயனம்.**
- ❐ **காலத்தின் கதி நாடக மேடையாயிற்று.**
- ❐ **ஒலிக்கும் பிரவாகம் ஓய்வின்றி ஓடும்.**
- ❐ **இலட்சியமற்ற யாத்திரையின் முடிவற்ற ஐயம்.**
- ❐ **உறக்கமின்றி உவகை சிரித்தொலிக்கிறது.**



- ❐ **சாவாத ஆசையின் சதா முணுமுணுப்பு.**
- ❐ **உலகத்தின் ஆனந்தம் ஒலியாய் எழுந்தது.**

உலகம் ஆனந்தத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டது. அங்கு துன்பமில்லை என்பது ஸ்ரீ அரவிந்தம். மனிதன் காணும் வலி, பொய், இருள், துன்பம், மரணம், தோல்வி, சோகம் அத்தனையும் உலகிலில்லாதவை, அகந்தையின் பார்வைக்கு அழியாத உண்மை. அகந்தை அழிந்தால் அவை எதிராக மாறும். முணுமுணுப்பது மனிதனில்லை, ஆசை. ஆசையழிந்தால் ஆனந்தம் பலிக்கும். சந்தோஷம் க்ஷணம் தவறாமல் - தூங்காமல் - அரவணைக்கக் காத்துள்ளபொழுது, நாம் சோகத்தை நாடிப் போகிறோம். இந்த இன்பம் பேரின்பம், புவியறியாதது, சொர்க்கத்தையும் கடந்தது, நம்மிடம் உள்ளது, நம்மைச் சுற்றியுள்ளது, பார்க்க வேண்டியது நாம், நம் பார்வையை அகந்தையிலிருந்து மாற்றி ஆத்மாவுக்களித்தால் ஆண்டவன் தரிசனம் கிடைக்கும்.

- ❈ *காற்றும் காதல் செய்யும்.*
- ❈ *காலனும் உயிரை வளர்ப்பான்.*
- ❈ *காலன் காலமாகும் நேரம் புவிக்கு அளித்த வரம்.*

✮ ✮ ✮

***அறிவிப்பு***

**இவ்வட்டத்திற்குள் ◎**

**இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## அன்பரும் - நண்பரும்

நண்பர் - வாழ்வில் கர்மம், தலைவிதி என்று ஏற்பவற்றை அன்னையிடம் வந்தபின் அனுபவிக்கத் தேவையில்லை. **அவை விலகுவதை அன்னை தன் சட்டங்கள்மூலம் - அதன் தாத்பரியத்தை - விளக்குகிறார்.** அவற்றை நாம் நம் அனுபவப்படி புரிந்துகொள்கிறோம். அதுவும் பலன் தரும். பழமொழியாகவும் அவை வழங்குகின்றன. வேண்டாதவர் கைபட்டால் குற்றம், கால்பட்டால் குற்றம் என்பது வாக்கு. கைபட்டது விஷயமில்லை, நான் வேண்டாதவள் என்பதே விஷயம் என நாம் புரிந்துகொள்கிறோம். அதே விளக்கம் அன்னை எழுதுவது புரிந்தால் முழுப் பலன் கிடைக்கும்.

"நம்மைக் குறைகூறும் முதலாளி நம் வேலையைச் சுட்டிக்காட்டினாலும், அவருக்கு நம்மைப் பிடிக்கவில்லை என்பதே விஷயம்"

என்பதை அன்னை,

"**நாம் செய்தவையெல்லாம் சரியானாலும், நம் மனம் தாழ்ந்ததானால்** - low consciousness, **தாழ்ந்த ஜீவியமானால் - காரியம் கூடி வாராது**"

என்கிறார்.

பலன் திறமைக்கோ, செயலுக்கோ இல்லை, பலன் "நாம் யார்" என்பதற்கு என்பது சட்டம்.

அன்பர் - எங்கள் ஆபீசில் 10 பேர் வேலை செய்கிறோம். என்னைத் தவிர எவருக்கும் 50% வேலை தெரியாது. 25% வேலை செய்யமாட்டார்கள். நான் சிறப்பாக வேலை செய்கிறேன் என்பதை மற்ற 9 பேரும் வாயாரப் புகழ்கிறார்கள். என் முதலாளி என்னால்தான் ஆபீசுக்குக் கெட்ட பெயர். நான் வேறு இடத்திற்கு மாற்றல் கேட்டுப் போகவேண்டும் என்கிறார். ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வருகிறது, அடக்கவே முடியவில்லை.

நண்பர் - பிரச்சினை, முதலாளியின் குத்தலான பேச்சு என்றால் அதைக் கொஞ்ச நாளில் தீர்த்துக்கொள்ளலாம், அது முடியும்.

அன்பர் - அது போதும், வேறெதுவும் தேவையில்லை.

நண்பர் - நீங்கள் வெகுதிறமைசாலி என்பதை ஆபீஸிலுள்ளவர் அனைவரும் அறிவார்கள், அதை வெளிப்படையாகக் கூறுகின்றனர். **உங்களுக்கு முதலாளி பாராட்டவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்,** எதிர்பார்த்தால் எதிராக நடக்கும், எதிர்பார்க்காவிட்டால் பிரச்சினை எழாது.

அன்பர் - வந்த புதிதில் முதலாளி பாராட்டினார்.

நண்பர் - அப்பொழுது உங்கள் மனத்தில் எதிர்பார்ப்பு இல்லை.

அன்பர் - எதிர்பார்ப்பதில் என்ன தவறு?

நண்பர் - தவறு என்று கூறமுடியாது. எதிராக நடப்பது வாழ்க்கையின் குணம். அதையும் தவறு என்று கூறமுடியாதே.

அன்பர் - சரி, இப்பொழுது பிரச்சினை தீர்ந்தால் போதும். எது சரி, எது தப்பு, என்ற விசாரணை தேவையில்லை. நான் என் மனதை மாற்றிக்கொள்கிறேன்.

அன்பர் பெரும்பாடுபட்டு மனதைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக்கொண்டார். அது முதலில் சாத்தியமாக இல்லை. வேலையில் கவனத்தை முழுவதும் திருப்பினால் மனம் குறையை நாடாது என முயன்றார். அந்த நேரம் இன்ஸ்பெக்ஷன் வந்தது. முதலாளி, குறை எல்லாம் நினைக்க நேரமில்லை. இன்ஸ்பெக்ஷன் முடிந்தது, வந்த ஆபீசர் கடைசி நாளன்று மீட்டிங் போட்டுப் பேசினார். மேல் ஆபீசில் "சிறந்த பிரான்ச் ஆபீஸ்" என்று தேர்ந்தெடுத்து பரிசு தருவது என்று முடிவு செய்திருந்தது உள்ளூரில் எவருக்கும் தெரியாது. இந்த ஆபீஸ் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதும் தெரியாது. மீட்டிங்கில் அவை வெளியிடப்படவேண்டும். மேலதிகாரி ஆபீஸைப் பாராட்டிப் பேசி பரிசு உண்டு என்று முடித்தார். Boss முதலாளியாக இருக்கிறார். ஆபீஸ் என்றாலும் தோரணை முதலாளிக்குரியது. முதலாளி பேசும்பொழுது அனைவரையும் பாராட்டிப் பேசினார், அன்பரை விசேஷமாகப் பாராட்டினார். **கடந்த ஆண்டுகளில் அன்பரின் சேவையை குறிப்பாக எடுத்துரைத்துப் பாராட்டினார். அன்பரால் ஆபீஸ் பரிசு பெற்றது என்றார். அதனால் முதலாளி அன்பருக்கு ஒரு பரிசு கொடுத்தார்.**

அன்பர் - **மனம் மாறினால் எதுவும் நடக்கும்,**
**எதிர்பாராவிட்டால் எல்லாம் நடக்கும்.**
**எதிர்பார்த்தால் எதிராக நடக்கும்**

என்பவற்றை இந்தக் கொஞ்ச நாளில் பூரணமாகப் பார்த்துவிட்டேன். என்னுடைய முதலாளி பேசியவற்றை எவரும் நம்பவில்லை, என்னாலும் இன்னும் நம்பமுடியவில்லை. இவையெல்லாம் நடப்பது நம் அனுபவத்திலில்லை, எல்லாம் அன்னையின் அருள் என்பது தெளிவு. **இதையும் கண்ணால் கண்டபின் எதையும் நம்பமுடியும் என்பது எனது இன்றைய மனநிலை.**



நண்பர் - சற்று யோசனை செய்தால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் காணாத அன்பருண்டா? உங்கள் வாழ்வில் இதுவரை இதுபோன்ற விஷயங்கள் நிகழவில்லை? நாம் கவனிப்பதில்லை, யோசனை செய்வதில்லை, விபரமாகப் புரிந்துகொள்வதில்லை.

அன்பர் - அன்று நாம் பேசும்பொழுது பிரச்சினை தீர்ந்தால் போதும் என்றேன். இன்று நீங்கள் மேலும் கூறியவற்றையும் அறிந்துகொள்ளவும் அனுபவிக்கவும் விரும்புகிறேன்.

நண்பர் - வாழ்க்கை நம் திறமைக்கு ஆரம்பத்தில் பலன் தருகிறது. நாம் வளர்ந்தபின் திறமைக்குப் பலன் வருவது குறைகிறது, பிறகு எதிரான பலன் வருகிறது.

அன்பர் - ஆமாம், அது ஏன்?

நண்பர் - மாணவன் படித்தால் போற்றுவார்கள். பட்டம் பெற்றபின் வேலைக்குப் போகாமல் படித்துக் கொண்டிருந்தால் திட்டுவார்கள். நாளானபின் மனிதன் வளரவேண்டும். வளர மறுத்தால் ஆரம்பத்தில் எதற்காகப் பாராட்டினார்களோ, அதற்கு இப்பொழுது திட்டு வரும்.

அன்பர் - அது புரிகிறது. எனக்கு எப்படி இந்தச் சட்டம் இப்பொழுது பொருந்தும்?

நண்பர் - ஆபீசில் ஆரம்பத்தில் உங்கள் திறமைக்குப் பாராட்டு வந்தது. பிறகு அதிக வாய்ப்பு வந்தும், அதற்குரிய அளவு மனம் வளரவில்லை. அதனால் குறை கண்டார்கள்.

அன்பர் - இப்பொழுது என் நிலை என்ன?

நண்பர் - ஆபீசில் நிலை மாறியதைக் கண்டபின், அதற்குரியதுபோல் மனம் மாறவேண்டும், மாறினால் பதவி உயரும்.

அன்பர் - எங்கள் ஆபீஸ் சட்டப்படி எனக்குப் பதவி உயர்வு வர இன்னும் 5½ ஆண்டுகள் சர்வீஸ் தேவை.

நண்பர் - **அன்பருக்கு ஆபீஸ் சட்டம் செல்லாது. அன்னை சட்டம் பலிக்கும்.**

அன்பர் - இன்று என் (முதலாளி) ஆபீஸரே என்னைப் பாராட்டிப் பரிசு கொடுத்தபின் நான் செய்யக்கூடியது என்ன?

நண்பர் - அடுத்த பதவிக்குரிய திறமையைப் பெற்றால், அது கிடைக்கும்.

அன்பர் - எனக்கு அந்தத் திறமையிருப்பதாக அனைவரும் சொல்கிறார்கள்.

நண்பர் - அப்படியானால், அந்த அந்தஸ்திற்குரிய மனப்பக்குவம் தேவை.

அன்பர் - புரியவில்லை.

நண்பர் - அதைச் செய்யும் வழிகள் பல. எளியது அடக்கம். உங்களுக்குக் கீழேயிருப்பவர்களை மேலேயிருப்பவர் போல் மனதால் நடத்த மனம் சம்மதித்தால் பிரமோஷன் வரும்.

அன்பர் - சட்டம் இடம் கொடுக்காதே.

நண்பர் - சட்டம் எப்பொழுதும் குறுக்கே நின்றதில்லை.



அன்பர் நண்பர் கூறியதை ஏற்றார். மனம் மாற முயன்றார். எதிரான பலன் வந்தது. தன் குறைகளை அறிந்து விலக்கினார், நிலைமை மாறியது. முதலாளி என அனைவரும் அழைக்கும் அதிகாரி மூன்று மாத லீவில் போனார். இதுவரை ஆபீசில் இல்லாத வழக்கப்படி அன்பருக்கு தற்காலிகமாக (incharge) அப்பதவியை லீவு முடியும்வரை வகிக்கச் சொன்னார்கள். லீவு முடிந்தபின் பழைய வேலைக்கு அன்பர் வந்தார். அவர் மனம் நாளுக்கு நாள் அடங்கியது. மேலும் சில மாதங்கள் கழித்து புது ஆபீஸ் திறந்தனர். அன்பருக்கு தற்காலிக பிரமோஷன் வந்தது! புது ஆபீசிற்கு இவரை ஆபீசராக நியமித்தனர். அன்பர் வாழ்வு மெருகு பெற்றது. மற்றொரு முறை நண்பரைத் தேடி வரும்பொழுது அவர் பேசிய பிரச்சினை குடும்பத்தைப் பற்றியது.

அன்பர் - சில மாதங்களாக நான் அன்னை, ஸ்ரீ அரவிந்தர் நூல்களைப் பயில்கிறேன். மனம் தெளிவு அதிகமாகிறது. தூக்கம் தியானம் போலிருக்கிறது. பொதுவாக நான் 5½ மணிக்கு எழுந்திருப்பேன். அப்பொழுதும் சற்று களைப்பாக இருக்கும். ஒரு ½ மணி கழித்துத்தான் தெளிவு வரும். இப்பொழுதெல்லாம் 5 மணிக்கே எழுந்துவிடுகிறேன். விழிப்பு வரும்பொழுதே உடலும் மனமும் தெம்பாகத் தெளிவாக இருக்கின்றன. பொதுவாக பிரமோஷன் வந்த புதிதில் வேலை பிடிபடுவது சிரமம். வேலை பிடிபடும்வரை ஆபீஸ் பிடிபடாது. அந்தச் சிரமம் எனக்கில்லை. அனுபவப்பட்ட ஆபீசர்போல வேலை நடக்கிறது. சீனியர் ஆபீசரைப்போல என்னைக் கீழே வேலை செய்பவர்கள் கருதுகின்றனர். ஆனால் படிப்பு - ஸ்ரீ அரவிந்தர் நூல்களைப் படிப்பது -

பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை என்பது விந்தையாக இருக்கின்றது.

நண்பர் - **புறத்திலுள்ள பிரச்சினைகள் நூல்கள் பயில்வதால் மறையும். அகத்திற்குரியவை மனம் மாறும்வரை இடம் கொடுக்கா.**

அன்பர் - அப்படி எதுவும் பெரியதான பிரச்சினையில்லை.

அத்துடன் அன்பர் போனவர் கொஞ்சநாள்வரை மீண்டும் வரவில்லை. நண்பருக்கு விஷயம் விவரமாகத் தெரியாவிட்டாலும், இப்பொழுது அன்பருக்கு மனைவி, மக்களிடம் பிரச்சினை என்று தெரிகிறது. ஆபீஸ் விஷயத்தில் மனம் மாறுவதுபோல் வீட்டு விஷயத்தில் மனம் எளிதில் மாறாது. அன்பருக்கு அங்குப் புரிந்ததைப்போல் இங்கு முதலில் புரியாது. அதனால் அப்பேச்சு எழவில்லை. இந்த அன்பர் போன மறுநாள் வேறு ஓர் அன்பர் கொண்டுவந்த பிரச்சினை ஒருவாறு நண்பருக்கு முதல் அன்பர் வீட்டு நிலையை விளக்கியது. இந்த அன்பர் மகன் கெட்டிக்காரப் பையன். படிப்பில் கவனம் செலுத்துவதில்லை. விசாரித்தபொழுது இவர் சிறுவனாக இருந்தபொழுது படிப்பில் கவனம் செலுத்தவில்லை எனத் தெரிந்தது. பழைய நாட்களைச் சமர்ப்பணம் செய்தால் மகன் மாறுவான் என்பதை அன்பர் ஏற்றுக்கொண்டார். இவருக்கும் சமீபத்தில் எதிர்பாராத பிரமோஷன். அது வந்த அன்று வீட்டில் மனைவியுடன் ஆரம்பித்த சண்டை வளர்ந்து முற்றிவருகிறது.

நண்பர் - பிரமோஷன் வந்தபிறகு மனம் ஆபீசில் அடங்கியதால், மனம் வீட்டில் அதைச் சரிக்கட்டும். மனைவியை அதிகமாக அதிகாரம் செய்யத் தோன்றும், அது உண்மையா?



அன்பர் சற்று நேரம் திகைத்து, யோசனை செய்து அதுவே சரி என ஏற்றுக்கொண்டு மனம் மாறி வீட்டிற்குப் போய் மனைவியுடன் திரும்ப வந்து கடந்த மாதங்களில் நடந்த அத்தனையும் விவரமாக - சந்தோஷமாக - கூறிச் சிரித்தனர். மகன் விஷயத்தில் தாயாரும் தான் படித்த நாட்களில் உள்ள அனுபவத்தைக் கூறி ஏற்றுக்கொண்டார். சில நாட்களில் வீட்டு நிலைமை நல்லபடியாக முழுவதும் மாறிவிட்டது.

- *மனம் ஏற்படுத்தும் பிரச்சினைகளை மனம் மாறாமல் தீர்க்கமுடியாது.*
- *நூல்கள் பயின்றால் எல்லா நன்மைகளும் எழும்.* **மனம் உற்பத்தி செய்த பிரச்சினை அசையாது.**

சுமார் 1½ வருஷம் முதல் அன்பர் வரவில்லை. வேறு எங்காவது நண்பரைச் சந்தித்தாலும் தன் ஆபீசில் உள்ள புது நிலைகள் எப்படி அன்னையின் அருள் செயல்படுவதைக் காட்டுகிறது என்று ஆர்வமாகப் பேசுவார். 1½ ஆண்டிற்குப்பின் நண்பரை அன்பர் சந்திக்க ஆரம்பித்தார். அன்னை நூல்களைப் பற்றிப் பேசுவார். கலகலப்பாக இருக்க முயன்றாலும் அன்பர் மனத்திலுள்ள பிரச்சினையை அவர் மறைப்பது நண்பர் அறிந்தது. ஏதோ மனப் போராட்டத்திலிருக்கிறார் என்பதை நண்பர் அறிவார். எவரும் அன்பரைப் பார்த்து அவர் மனம் கவலைப்படுகிறது என்று எளிதில் புரிந்துகொள்ள முடியாது. முடிவாக ஒரு நாள் அன்பர் மனம் திறந்து பேசினார். எல்லாப் பிரச்சினைகளையும் கூறினார். அவை,

1. *மனைவியுடன் எந்த வாக்குவாதமுமில்லை என்றாலும் பழைய சுமுகமில்லை. மனத்துள் இடைவெளி வந்துவிட்டது. மனம் அதனால் பாரமாயிற்று.*

2. மகன் தவறாது முதல் மார்க் வாங்குகிறான். முதல் மார்க் போட்ட ஆசிரியர் அதை அடித்துவிட்டு இரண்டாம் மார்க் போட்டார், இது இரண்டாம் முறையும் நடந்துவிட்டது.
3. குடியிருக்கும் வீட்டில் நல்ல முறையில் பழகிய வீட்டுக்காரர், எதற்கெடுத்தாலும் குறை கூற ஆரம்பித்து இப்பொழுது வீட்டைக் காலி செய்யச் சொல்கிறார்.
4. **ஆபீஸில் மரியாதை, சந்தோஷம், வசதி, நல்ல செய்தி வளர்கிறது. வீடு எதிர்மாறாக இருப்பது புரியவில்லை.**

திறமையிருப்பது அரிது, நமக்குப் பொறுப்பு பல இடங்களில் உள்ளது. திறமை பலன் தர மற்ற இடங்களை நாம் புறக்கணிப்போம். அது நமக்குத் தெரிவதில்லை. புறக்கணிப்பதால் எழும் குறை, குறையாகத் தெரியுமே தவிர காரணம் புரியாது. இந்த அன்பருக்கு எதிர்பாராது வந்த பிரமோஷன், நல்ல பெயர், எல்லாம் இவர் கவனத்தை முழுவதும் ஆபீசுக்குக் கொண்டுபோய்விட்டது. வீடு, மனைவி, மகன், புறக்கணிக்கப்பட்டார்கள். அது மனைவியிடம் மனத்தால் இடைவெளியாகவும், மகனிடம் படிப்பில் பிரச்சினையாகவும் தெரிகிறது. இது வாழ்க்கைச் சட்டம். அன்பர் மனம் நினைப்பது வேறு,

> **ஆபீஸில் உயர்வு வரும்பொழுது மனைவி, மக்கள் உயர வேண்டுமல்லவா? அவர்களுக்கு நல்லெண்ணமிருந்தால் பாராட்ட வேண்டாமா? அவர்கட்குக் குறையிருந்தால், என்மீது நல்ல எண்ணமில்லை எனப் பொருள். அப்படித் தெரியவில்லையே, என்ன என்று புரியவில்லை.**

ஓரிடத்தில் உயர்வு வந்தால், அடுத்த இடம் குறையும் என்பது சட்டமானால், அதில் என்ன பலன், எந்த இடத்தில் உயர்வு வேண்டும் என்பதை நாம் முடிவு செய்துகொள்ள வேண்டுமா? மேலும் நாம்



பிறர் விஷயத்திலும், நம் அனுபவத்திலும் கீழ்க்கண்ட நிகழ்ச்சியைப் பார்க்கிறோம், அதை எப்படிப் புரிந்துகொள்வது?

> **ஒரு நல்லது நடந்தால், பல நல்லவை தொடர்ந்து நடப்பதை நாம் காண்கிறோம்.**

சட்டங்கள் பல, அவற்றைக் கீழ்க்கண்டவாறு எழுதலாம்.

- ❈ அருள் செயல்படுவதை நாம் இருப்பதைப்போல் - மனம் மலர்ந்து நன்றியால் விரியாமல் - பெற்றுக்கொண்டால், ஓரிடத்து உயர்வு, அடுத்த இடத்தில் குறைவாகும்.
- ❈ அருள் அதிர்ஷ்டமாக வந்தால், மனம் ஜீவனில் மலர்ந்து நன்றியால் விரிந்தால் ஒரு நல்லது அடுத்த அடுத்த நல்லவைகளைக் கொண்டுவரும்.
- ❈ நல்லது நடந்தவுடன் அடுத்தவர்க்கும் அது வரவேண்டும் என நினைத்தால் அது இருவகையானப் பலன் தரும்.

  உயர்வாக நினைத்தால் வருவது பெருகும்.

  அகங்காரமாக, பெருமையாக நினைத்தால் வந்ததும் போகும்.
- ❈ வருவதைப் பாராமுகமாகப் பெற்றால் அல்லது ஒன்று நல்லதாக நடக்கும்பொழுது உள்ள கடமைகளை விட்டுவிட சோம்பேறியாக நினைத்தால் வருவது ஓரிருமுறை வந்து அத்துடன் நிற்கும்.

**பெறுவதும், வருவதும், பெற்றது நீடிப்பதும், குறைவதும், பெறும் மனப்பான்மையை மட்டும் பொருத்தது.** அன்பர் சற்றுக் கூச்சப்பட்டவர். அவர் சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசியது அதிகம். அவருக்குப் பொதுவான பதில் கூறுவது முறை. பொதுவான பதில் மனத்தைத் தொடாது. பிரச்சினையைத் தீர்க்காது. அன்பர் மனம் தயாராக இல்லாத இடத்தில் நண்பர் செயல்பட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முயல்வது அகந்தையின் செயல் எனப்படும். இப்படிப்பட்ட நேரங்களில்

Silent will மௌனம் பலன் தரும். எனவே நண்பர் இரு முடிவுகட்கு வந்தார்.

1. அன்பருக்குத் தேவையான பதிலைப் பொதுவாகக் கூறி அதை அன்னை எழுதியுள்ள இடங்களில் அன்னை வாயால் கேட்கச் சொல்வது,
2. குறிப்பாக அவர் செய்யவேண்டியவற்றை தம் மனதில் தயார்செய்து பேசாமலிருப்பது (Silent will).

அன்பர் பெற்றது அருள் என்றாலும், ஒருவகையில் பேரருளாகும். 5½ ஆண்டில் வரவேண்டிய பிரமோஷன் முன்கூட்டி வந்ததும், அங்குள்ள வழக்கமான பிரச்சினைகள் இல்லாமலிருப்பதும் அன்னையின் முத்திரை, பேரருள் எனலாம். பேரருளை நன்றியால் ஏற்பது முறை. **அன்பர் திருப்தியாக ஏற்றுக்கொண்டார்.**

- ❈ யோக பாஷையில் அன்பர் செய்யவேண்டியது **திருப்தியை நன்றியாக மனத்தில் மாற்றுவது.**
- ❈ நான் அன்றாடம் பேசும் மொழியில் அதை வேறு வகையாகக் கூறலாம். "எனக்குப் பலித்துவிட்டது" என்று ஏற்பதற்குப் பதிலாக "அன்னை பலிக்கும் அளவுக்கு எனக்கு நம்பிக்கையிருக்கிறது" என்று மாற்றி நினைக்கலாம். அதைவிட "என் நிலையைப் புறக்கணித்து அருள் செயல்பட்டிருக்கிறது" என்று புரிந்து கொள்ளலாம்.
- ❈ வீட்டில் தமக்கு வந்த உயர்வை மனைவியும், மகனும் பாராட்டவேண்டும் என்பதற்குப் பதிலாக, ''எனக்கு வந்த பிரமோஷன் என் மனைவிக்கும், மகனுக்கும் வரவேண்டும்" எனக் கருதலாம், ''நான் பெறும் சந்தோஷம் என் மனைவி பெறவேண்டும்" எனலாம், "இந்த சந்தர்ப்பம் - பிரமோஷன் - என் மகனுக்கு எந்தப் பலனை, எப்படிக் கொடுக்க முடியும்?" என்ற எண்ணங்கள் **சுயநலம் பரநலமாக மனதில் மாறுவது.**



நண்பர் அன்பர் கூறியதைக் கேட்டுக்கொண்டு, அதற்குரிய பொதுப் பதிலைக் கூறியபொழுது, நண்பரின் மனைவியும் அன்பரின் மனைவியும் சேர்ந்து உள்ளே வந்து அன்பருடன் பேசுவதற்காகக் காத்துக்கொண்டிருந்தனர். அதை அறிந்த அன்பர் எழுந்து அவர்களைப் பார்க்கப் போனார். "நம் பையன் விஷயம் எப்படியோ பிரின்சிபாலிடம் சென்று அவர் ஆசிரியரைக் கூப்பிட்டு மார்க்கைப் மாற்றி இவனுக்கு முதல் மார்க் போட உத்திரவிட்டார்" என்று அன்பரின் மனைவி கூறியதுடன் இத்தனையும் நடந்த வகையையும் எடுத்துக் கூறினார். சில பெண்கள் சேர்ந்து பிரச்சினைகளைப் பேசியபொழுது அவர்கள் படித்துக்கொண்டிருந்த புத்தகம் "பிரச்சினையை நாம் மட்டும் பொறுப்பு என்று பார்த்தால் தீரும்" என்று கூறியதை ஆழ்ந்து விவாதித்ததைக் கூறினார். அன்பரின் மனைவி புத்தகம் கூறிய சொல்லை வேதவாக்காக – அன்னை வாக்காக – எடுத்துக்கொண்டு அடுத்து வரும் தியானத்தில் கலந்துகொண்டதை அவர் கூறாவிட்டாலும், அன்பர் புரிந்துகொண்டு நண்பரிடம் வந்து "நான் எப்படி என் பிரச்சினைகளைக் கூறத் தயங்கினேனோ, அதுபோல் என் மனைவி தாம் என்ன செய்தார் என்பதைக் கூறத் தயங்குகிறார்" என்று விவரித்தார்.

- ❈ **பிரச்சினை தீர்வது பிரச்சினையில்லை.**
- ❈ **நமக்கு அதில் என்ன பங்கு என்பதே பிரச்சினை.**

✫ ✫ ✫

## ஸ்ரீ அரவிந்த சுடர்

முக்கியம் என்பது மனிதனுக்கு மட்டும் உண்டு. பொருளிலும் இல்லை. செயலிலும் இல்லை.

*மனிதனே முக்கியம், மற்ற எதுவுமில்லை.*

# அபரிமிதமான செல்வம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

பழம் என்பது பொருள். அதை வாங்கி விற்பவன் பழம் எத்தனை நாளைக்கு வரும், விற்க எத்தனை நாளாகும், எவ்வளவு அழுகிப் போகும் என்பதை அறிந்து கொள்முதல் செய்யவேண்டும். அப்பொழுதுதான் இலாபம் வரும். வேலையில் சூட்சுமம் உண்டு. ஹோட்டல் சர்வரிலிருந்து ஹைகோர்ட் வக்கீல்வரை வாடிக்கைக்காரரை அறியமுடியாதவருக்குத் தொழில் பலிக்காது.

எந்த வேலையிலும் நல்லது, கெட்டதுண்டு. இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் சூட்சுமம் மிஞ்சி நிற்கும். மனை விற்குமிடங்கள், ரொக்க லாவாதேவி, புரோக்கர் வேலை செய்யுமிடங்களில் சூட்சுமம் மிச்சமாக இருக்கும். அங்கெல்லாம் திருட்டுத்தனம் அதிகமாகப் பலிக்கும். குற்றவாளிகட்கு சூட்சுமம் அதிகம். வேலையின் எல்லா அம்சங்களும் தெரியும் நேரம் பகுதியின் சூட்சுமம் விளங்கும்.

மார்க்கட் என்பது பெரியது. பண்டமாற்று அதன் பகுதி. மார்க்கட் புரிந்தால் பண்டமாற்று புரியும். உபரியான சக்தியைச் சேகரம் செய்வது நம் திறமையை வளர்ப்பது. பணம் என்பதில்லாவிட்டால் மனிதன் தனக்கு வேண்டியதை மட்டும் உற்பத்தி செய்வான். உபரியை உற்பத்தி செய்யமாட்டான். பணமாக உபரியை மாற்றலாம் என்பதால் உபரியை உற்பத்தி செய்கிறான். பணம் சம்பாதிக்கும் ஆசையால், அதிகபட்சம் வேலை செய்கிறான். நாணயம் வந்தபிறகு உள்ளூர் சரக்கை வெளியூரில் விற்க முடிந்தது. நோட்டு வந்தபிறகு வெளி மாநிலத்தில் விற்க முடிந்தது. பணம் இவை மூலம் மனிதனுடைய ஆட்சியை விரிவு செய்கிறது.



வெகு தூரத்தில் பொருள்களை விற்றால் பாங்க்மூலம் பணம் வசூலாகும். ரயில்வேமூலம் சரக்கு போகும். பணம் வசூல் செய்ய கோர்ட்டிற்குப் போக வேண்டிவரும். சுங்க வரி கட்டுகிறோம். பாங்க், ரயில்வே, கோர்ட், சர்க்கார் ஆகிய ஸ்தாபனங்கள்மூலம் பணம் செயல்படுகிறது.

***நேரடியாகப் பணம் செலாவணியாவதற்குப் பதிலாக ஒரு ஸ்தாபனத்தின்மூலம் பணம் செயல்பட்டால், பணத்திற்கு சக்தி வளரும்.***

பாங்க்மூலம் சரக்கு விற்கப்பட்டால், பணத்தை ஏமாற்றமுடியாது, வசூலிக்கப்படும். ஏமாற்ற முடியாது எனில் பணத்திற்கு பலம் வந்துவிடும். எத்தனை ஸ்தாபனங்கள் மூலமாக பணம் செயல்பட்டால் அத்தனை மடங்கு பணத்திற்கு பலமும், மரியாதையும் வரும். அத்துடன் அதன் சூட்சுமப் பலமும் வளரும். ஊரில் எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும் அவர் யாரிடம் கடன் வாங்கியிருக்கின்றாரோ, அவருக்குக் கட்டுப்படுவார். அதாவது பணத்திற்குக் கட்டுப்படுவார். பணம் உற்பத்தியானது, வளர்ந்தது, வளர்ந்து முடிந்தது, அதன் சூட்சும சக்தி ஆகியவற்றிற்குச் சட்டங்களுண்டு. இவை இத்துறையிலுள்ளவர் அறிவர். இந்தச் சட்டங்களும், அதன் சூட்சுமங்களையும் அறிந்தால்,

1. ***பணத்தைப் பெருக்கலாம்.***
2. ***பெருகிய பணத்தால் வரும் ஆபத்திலிருந்து தப்பலாம்.***

பௌதீகம், ரசாயனம் ஆகிய சட்டங்களுடன் பணத்தின் சட்டங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது பயன் தரும். கணிதம் இச்சட்டங்களைச் சூத்திரமாக்கும், தத்துவம் சுருக்கும், கவி காவியநயத்துடன் கூறுவார், யோகி சாதிப்பார்.

பணம் பெருகவேண்டும். பெருகியபின் அதனால் தொந்தரவு வரக்கூடாது. நாம் சம்பாதித்த பணத்தால் நமக்குத் தொந்தரவு

வரக்கூடாது. நம் பணத்திலிருந்து நமக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பவை அனைவரும் தெரிந்தவை என்றாலும் விளக்கம் அவசியம்.

கோடிக்கணக்காக லாட்டரியில் சம்பாதித்த பலரை நிருபர்கள் பேட்டி கண்டனர். அத்தனை பேரும் பணத்தை இழந்தவர்கள். இழந்ததால் தாம் முன்னிருந்த நிலையைவிட மனத்தால் தாழ்ந்தவர்கள். அடுத்த முறை பரிசு கிடைத்தால் ஏற்கமாட்டோம் என்றும் கூறினார்கள். எது உண்மையோ, இல்லையோ அவர்கள் பெற்ற பெரும் பணம் அவர்கட்கு சந்தோஷம் தரவில்லை.

பணத்தால் எப்படித் தொந்தரவு வரும் என்பது இத்தலைமுறையில் சம்பாதித்தவர்கள் அறிவார்கள். பரம்பரை பணக்காரனுக்குண்டான நிதானம், அனுபவமில்லாமல் அந்த அனுபவம் பெற பணத்தை இழந்து, நிம்மதியையும் இழப்பவர் அதிகம். சில கோடி சம்பாதிப்பவர்கட்கு இப்பிரச்சினை அதிகமாக இல்லை. பல ஆயிரம் மடங்கு சொத்து சேரும்பொழுது அதை நிர்வாகம் செய்ய முடியாமலும், அவற்றால் ஏற்படும் மனத்தாங்கலும், டென்ஷனும் பெரிய தலைவலி. பெரும்பாலும் பணத்தை இழந்துவிடுவார்கள். அடுத்த தலைமுறை கட்டுப்படாது. இவை அனைவருக்கும் உள்ள பிரச்சினைகள். நான் இதை மட்டும் குறிப்பிடவில்லை. பெருந்தொகை, அதற்குரிய இடத்தில் சேர்க்கும். பெருந்தொகைக்குப் பெரிய சக்தியுண்டு. இது அறிவுக்குக் கட்டுப்படாது, வலிமைக்குக் கட்டுப்படும். அதற்கும் சூட்சுமம் வேண்டும். இல்லையேல் இப்பணத்தின் சக்தி பெற்றவரை அழிக்கும். இது பணம், பதவி இரண்டுக்கும் உள்ள தன்மை. நமக்கு நேரடியாகச் சம்பந்தப்பட்ட பிரச்சினையில்லை என்றாலும், இதைக் குறிப்பிடவேண்டியது அவசியம் என்பதால் குறிப்பிடுகிறேன்.

**இந்தப் பாதுகாப்புப் பெற சூட்சும ஞானம் வேண்டும் என்பதே நமக்கு இங்கு முக்கியம்.**



இந்த அம்சத்தை ஒருவர் விவரமாக அறியவேண்டுமானால், சமூக முன்னேற்றம், சமூகப் பரிணாமம் என்ற நோக்கில் பணத்தை அறிய முன்வரவேண்டும்.

**பணத்தை யோகக் கண்ணோட்டத்தில் ஆராய்ச்சி செய்தால், அதுவே முடிவானது.**

சமையல் கற்பவனைக் கருதுவோம். (recipe) எப்படிச் சமையல் செய்வது என இவனுக்குக் கற்பிக்கலாம். தேர்ந்த சமையல்காரனுக்கு (master cook) பதம்பார்க்க ருசி பார்க்க தேவையில்லை. கொதிக்கும் பாத்திரத்தைப் பார்த்தவுடன் அவனுக்குப் பதம் தெரியும். சாம்பாரில் என்ன போடவேண்டும் என எழுதித் தரலாம். அதனால் பதம், ருசியைக் கற்றுக்கொள்ள முடியாது. தலைமைச் சமையல்காரனுக்கு அந்த ஞானம் சூட்சுமமாக வருகிறது. வாயால் சொல்லும் தேவையில்லை.

ஒர்க்ஷாப்பில் பல ஆண்டு வேலை செய்து வேலையைக் கற்றுக்கொள்வதை, பயிற்சியால் குறைந்த நாளில் கற்றுத் தரலாம். படிப்பிருந்தால் பயிற்சிக் காலத்தையும் சுருக்கலாம். வேலைக்குரிய சூழல் சூட்சும ஞானம் பெறும் திறனைத் தரும். பணிவு, கீழ்ப்படிதல், அடக்கம் ஆகியவை அந்தரங்கமானவை. குருவின் சூட்சும ஞானம், பணிவால் சிஷ்யனுக்கு சூட்சுமமாக வரும். அடக்கம் அந்தரங்கக் காதலானால் அடிமனம் திறந்து அனைத்தையும் அரை நிமிஷத்தில் குருவிடமிருந்து பெறும்.

லட்சியம், தீட்சண்யம், பணிவு, பக்தி, சேவை, ஆர்வம், நன்றி சூழலிலிருந்தாலும், குருவிடமிருந்தாலும், சிஷ்யனிடமிருந்தாலும் சூட்சுமமாகக் கற்க உதவும். குருகுலம் ஏற்பட்டது அக்காரணத்தால்தான். கல்லூரியின் சூழல் கற்பதைச் சிறப்பாக்கும். அமெரிக்காவில் வசிப்பது பல்கலைக்கழக வாசத்திற்குச் சமம். M.B.B.S. முடித்தபின் டாக்டர் ஓர் ஆண்டு ஆஸ்பத்திரியில் பயிற்சி பெறுகிறார்.

பணத்திற்கும் சூட்சுமம் உண்டு. சூட்சுமச் சூழலில் பணம் காலடி எடுத்துவைத்தால் அது தானே பெருக ஆரம்பிக்கும். 1990 முதல் உலகில் அதைக் காண்கிறோம். தானே பெருக முதிர்ச்சியும் பக்குவமும் தேவை (saturation and maturity). மொழியின் வளர்ச்சி இதை நமக்கு அறிவுறுத்தும். குழந்தை மற்றவர்கள் பேசுவதைக் கேட்டு (from the physical environment) கற்றுக்கொள்கிறது என்றாலும் அதன் சூழலில் சூட்சுமச் சூழலும் கலந்துள்ளது. (Pronunciation, tone, accent, intonation) உச்சரிப்பு, குரல், சொல்நயம், அதன் சுருதி ஆகியவற்றைப் புத்தகத்திலிருந்து கற்கமுடியாது. கேட்டுக் கற்பவை அவை. பிறமொழி பயிலும்பொழுது இவற்றைப் பெறமுடியாது. வடநாட்டிற்குப் போன தமிழன் இந்தி கற்பதற்கும், நம்மூரில் இந்தி கற்பதற்கும் வித்தியாசம் உண்டு. வடநாட்டில் அனைவரும் இந்தி பேசுவதால் சூழல் கனத்துள்ளது. எளிதில் வரும். தாய்மொழியின் சூட்சுமத்தை அறிபவர் அதன்மூலம் பிறமொழியின் சூட்சுமத்தை எட்டினால் எளிதில் கற்கலாம். அது அனைவராலும் முடியாது.

- Conception, perception, sensation என்பவை எண்ணம், உணர்ச்சி, உடல் அறியும் நிலைகள்.
- இந்த ஆராய்ச்சிக்கு எண்ணமே ஜடமானது.
- சூட்சும ஞானம்மூலம் எண்ணம் உணர்ச்சியாகிறது, conception perception ஆகிறது.
- அதுவே உடல் அறியும் (sensation) பாதை.
- சூட்சும ஞானம் ஜடமான அறிவை சூட்சுமமான அறிவாக்கும்.
- அறிவு சூட்சுமமானால் ஆயிரம் மடங்கு பலிக்கும்.

எத்தனை வருஷம் பேனாவைப் பயன்படுத்தினாலும் பேனா செய்யும் திறன் வாராது. அது ஜடமான செயல், பயன்படுத்தும் திறமை. நெடுநாளாகப் பணத்தை நாம் பயன்படுத்துகிறோம்,



பயன்படுத்தினால் நமக்கு பயன்படுத்தத் தெரியும். அதனால் பணத்தை உற்பத்தி செய்ய முடியாது. பேனாவால் எழுதுவது பயன்படுத்துவது, பேனாவைச் செய்ய டெக்னாலஜி தெரியவேண்டும், கம்பனி வேண்டும், மெஷின் வேண்டும், முதல் வேண்டும், இவற்றுடன் சூட்சும ஞானமும் வேண்டும். பணத்தை உற்பத்தி செய்ய பணத்தின் வரலாறு தெரியவேண்டும். பணம் உற்பத்தியாகும் வேலை ஒன்று வேண்டும், பணத்தின் தத்துவம் தெரியவேண்டும், இவற்றுடன் பணத்தின் சூட்சுமம் தெரியவேண்டும். பணம் ஓர் அமைப்பு. ஸ்தாபனம் (organisation). உற்பத்தி, விநியோகம், உபயோகம் ஆகியவற்றைச் சேர்ப்பது பணம். நெல் நிலத்தில் உற்பத்தியாகிறது. மார்க்கட்டில் விற்கிறது. நாம் வாங்கிப் பயன்படுத்துகிறோம். இவற்றை எல்லாம் இணைப்பது பணம். விவசாயி பணத்திற்கு நெல்லை விற்கிறான். நாம் பணம் கொடுத்து நெல் வாங்குகிறோம். அவனுக்கு ஒரு விலை, நமக்கு வேறு விலை. விலைகள் மாறும், விவசாயி தன் விலையை ஏற்கவேண்டும், நாம் வியாபாரி விலையை ஏற்கவேண்டும். இவையெல்லாம் பணத்தால் நடக்கின்றன. இந்த அமைப்பு (organisation) சூட்சுமமானது. அமைப்பு மனத்திற்குரியது, அமைப்பு சூட்சுமமானது.

பணத்தின் அத்தனை அம்சங்களையும் அறிந்து, அதன் சூட்சுமத்தையும் அறிந்தால், பணத்தை உற்பத்தி செய்ய முடியும்.

நாணயத்தை உற்பத்தி செய்தவன் என்ன நினைத்திருப்பான் என்று நாம் கருதினால், நாணயம் நோட்டானபொழுதும் அதே நினைவு எழுந்தது. கம்ப்யூட்டரால் பணம் வேகமாக சென்றபொழுதும் அதே நிலை. இவர்கள் சமூகத்திற்குச் செய்த சேவை பெரியது. பல சமயங்களில் இவை வியாபார நோக்கால் நடந்தது என்றாலும், அடிப்படையில் இவை சமூகத்தின் நல்லெண்ணத்தை மனிதனுக்களித்த செயல்கள். எந்தப் புதிய வசதி மனிதனுக்கு

வருவதும், சமூகத்தின் நல்லெண்ணமாகும். நல்லெண்ணம் ஒரே நோக்கமாகும். நோக்கம் சூட்சுமமாகும். ஆன்மா முழுவதும் சூட்சுமம். அதன் அம்சங்களான சத்தியம், நல்லது, சந்தோஷம் போன்றவையும் சூட்சுமமானவையே. நம் நல்லெண்ணமும் சூட்சுமமானது. அதனால் நம் நல்லெண்ணம் உயர்ந்து சமூகத்தின் நல்லெண்ணத்தைத் தொடமுடியும்.

பணத்தைப் பற்றி எல்லா விவரங்களையும் முழுமையாகச் சொல்லாவிட்டாலும், மேற்சொன்னவை எல்லா முக்கிய விஷயங்களையும் சுருக்கமாகக் கூறுகிறது. மனிதன் இப்பலனை எப்படிப் பெறுவான் என்பது நமக்கு முக்கியம். அவன் பெறவேண்டியவை organisation நிர்வாக அமைப்புத் திறமை, சூட்சும ஞானம், நல்லெண்ணம், நல்நோக்கம், பண்புகளைத் தீவிரமாக அறிதல், காரியத்தைச் சாதிக்கும் பண்புகள். இவற்றைப் பெற்றவன் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம். எவ்வளவு நாளாகும் என்பது கேள்வியில்லை. ஒரு சோதனை செய்ய மனம் தயாராகவேண்டும். பணம் உற்பத்தியாக மனத்திலுள்ள தடைகளை அகற்றி, முடிவு செய்வது முக்கியம்.

*தொடரும்....*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பரம்பரைச் சுபாவத்தையும், மனசாட்சியையும் மீறத் தயங்குவதை அன்னை ஏற்று, அவற்றை மீறாமல் அனுபவிக்கும் சந்தர்ப்பத்தையும் அன்னை அளிக்கிறார்.

*தயக்கத்தையும் ஏற்கும் தயாபரி.*





## சரணாகதி சமாதியைக் கடந்தது

*(டிசம்பர் 2002 இதழின் தொடர்ச்சி....)*

*(ஆகஸ்ட் 15, 2002 அன்று இராணிப்பேட்டை தியான மையத்தில் திருமதி வசந்தா லஷ்மிநாராயணன் நிகழ்த்திய உரை)*

### குறைகளைச் சமர்ப்பணம் செய்வது :

குறை என்பது குணக்குறை. வழக்கம் மாறினாலும் குணம் மாறாது. குணம் மாறுவது என்பது சுபாவமாகும். அப்படியே மாறினாலும் நிரந்தரமாக மாறாது. கோபக்காரர் தம் கோபத்தைக் கட்டுப்படுத்த முயன்றால் இதன் முக்கியத்துவம் புரியும். குறை என்பது சுபாவத்தை வெளிப்படுத்துவது. கர்மம் சுபாவக் குணத்தின் மூலம் தன்னை நிலைநாட்டுவது. குறைகளை விலக்குவது என்பது சுபாவத்தை மாற்றுவதாகும். கர்மத்தை அழிப்பதாகும். சுபாவத்தின் வலிமையை அறிந்த கீதை அதன் பெருமையைக் கூறுகிறது. அவரவருக்கு ஏற்பட்ட சுபாவம் அவரவர்களுக்குப் பொருத்தமானது, உயர்ந்தது என்று கூறுகிறது. பிறருடைய உயர்ந்த சுபாவத்தைப் பின்பற்றுவதைவிட நம் தாழ்ந்த சுபாவத்தைப் பின்பற்றுவது பலன் தருவது என்று கீதை கூறுகிறது. ஸ்ரீ அரவிந்தம் சுபாவத்தை மாற்றவேண்டும் என்று சொல்வதில்லை. அழிக்கவேண்டும் என்று கூறுகிறது. சுபாவத்தின் வலிமையை அறிந்த ஸ்ரீ அரவிந்தம் சுபாவத்தை மாற்றும் முயற்சியையும் அதை ஒட்டியே செய்யவேண்டுமே தவிர அதை எதிர்த்துச் செய்ய முடியாது என்கிறது. இதன் பின்னுள்ள ஆன்மீகத் தத்துவத்தை சற்றுக் கருதுவோம். அவசரமானவன் பொறுமையைக் கைக்கொண்டால் அதைச் சாதிக்க அவசரப்படுவான். அது அவசரத்தின் வலிமை. வாய் ஓயாமல் பேசுபவர் பேச்சை நிறுத்த முடிவு செய்தால் ஏன் பேசக்கூடாது என்று ஆயிரம் பேரிடம் விளக்கம் கூறுவார். அப்படியானால்

இதைச் சாதிப்பது எப்படி? மனிதனுக்குள்ள உயர்ந்த கருவி மனம். மனத்தில், அதிகபட்ச உயர்வான அம்சம் அறிவு. நாம் பொறுமையைக் கைக்கொள்ளவேண்டுமானால்,

- நம் மனம் பொறுமையின் அவசியத்தை உணரவேண்டும்.
- அந்த முடிவைச் சமர்ப்பணம் செய்யவேண்டும்.
- பொறுமையின் காரணங்களை அறியவேண்டும்.
- அவசரம் உள்ளிருந்து உணர்ச்சியில் எழுவதைக் காணவேண்டும்.
- உடலில் அதன் ஆரம்பத்தைக் கண்டுபிடிக்கவேண்டும்.

இந்த முடிவைச் சமர்ப்பணம் செய்த பிறகு அடுத்த முறை அவசரம் எழும்போது அதன் முனை மழுங்கி இருப்பது தெரியும். கவனித்துப் பார்த்தால் அவசரம் ஆசையால் வருகின்றது என்று புரியும். மேலும் கவனித்துப் பார்த்தால் அனுபவம் இல்லாததால் வருகின்றது என்று தெரியும். உதாரணமாக வீட்டில் phone வைக்கவேண்டும் என்று முடிவு செய்தால் அனுபவம் உள்ளவர்களுக்கு இந்த வேலை நம் இஷ்டப்படியோ, நம் அவசரத்திற்கோ நடக்காது, டிப்பார்ட்மெண்ட் அதன் போக்குப்படியே நடக்கும், phone கிடைக்கப் பத்து நாட்களாகும், சில மாதங்களுமாகும் என்று அறிவர். அனுபவமில்லாதவர் அவசரப்படுவர். அவசரம் காரியத்தை ஒத்திப்போடும். Phone வைக்கும் வேலையை மறந்து பொறுமையை ஏற்கும் வேலையாக மாற்றினால், அதற்குத் துணையாக அவசரத்தைச் சரணம் செய்தால் சரணாகதியும், சமர்ப்பணமும் பலித்தால் வழக்கமான அவசரம் சில நிமிடம் தலை எடுக்காது. அவசரம் தலை எடுக்காத அந்த இரண்டு நிமிடத்தில் எவராலும் நம்பமுடியாதபடி phone வீட்டிற்கு வரும். Phone கிடைத்ததில் திருப்தி ஏற்பட்டால் மீண்டும் அவசரம் வரும். Phone-ஐப் புறக்கணித்து சரணாகதியைப் பின்பற்றினால் அடியோடு அவசரம் அழிந்தது போன்று அமைதி ஏற்படும். மற்றவர்களுக்கு அது ஆச்சரியம் கொடுக்கும். ஆனால் அமைதி உண்மையானாலும், அவசரம் அழிந்தது



உண்மையானாலும், phone வந்தது உண்மையானாலும், அவசரம் திரைமறைவில் இருக்கும். இந்த அவசரத்திற்குரிய காரணங்களை யோசனை செய்து பார்த்தால் இது phone-க்காக வரும் அவசரமில்லை. நம் சுபாவத்திலுள்ள அவசரம் என்று புரியும். வெளியே புறப்படுவது, சாப்பிடுவது போன்ற எளிய காரியங்களிலும் நமக்கு அவசரம் இருப்பது தெரியும். இது தெரிவது பெரிய விஷயம். மனம் ஏற்றுக்கொள்வது அதைவிட முக்கியம். எனக்கு எல்லா விஷயங்களிலும் அவசரம் இருக்கின்றது. இது மாறி பொறுமையாகவேண்டும் என்ற முடிவு எடுக்கவேண்டும். அந்த முடிவைச் சமர்ப்பணம் செய்யவேண்டும். முடிவு சமர்ப்பணமானால், phone-க்கான அவசரம் அடங்கியதுபோல் எல்லா விஷயங்களிலும் அவசரம் அடங்கி அமைதி எழும். இதனாலும் அவசரம் அழிந்தது என்று அர்த்தமாகாது. அடுத்த கட்டத்தில் போய் ஒளிந்துகொண்டிருக்கும். இதற்கு மேற்கொண்டு முன்னேற்றம் வேண்டுமானால் அவசரத்தின் ஆன்மீக அர்த்தத்தை அறிந்துகொள்ளவேண்டும். அவசரம் என்பது பொறுமைக்கு எதிரானது, பொறுமை சமத்துவத்தின் மனித ரூபம். எனவே அவசரம் சமத்துவமாகத் திருவுருமாற்ற வேண்டியது. சமத்துவம் என்பது அனந்தத்தின் ஜீவியம் (infinite). அவசரம் எழுவதற்குக் காரணம் நாம் சிறியதாக (finite) இருப்பது என்று புரியும். நாம் பிரான்ச் ஆபீஸ் மேனேஜராக இருந்தால் phone வைக்க அவசரப்பட்டால் நம் சிறிய நிலை நமக்கு அவசரம் கொடுக்கிறது என்று புரிந்துகொள்ளவேண்டும். ஹெட் ஆபீஸ் மேனேஜர் நம் நிலையில் என்ன செய்வார் என்று யோசனை செய்யவேண்டும். அதை விசாரித்தால் ஹெட் ஆபீஸ் மேனேஜர் விபரம் தெரிந்தவர். சென்ற முறை அவர் ஆபீஸிற்கு phone வைக்கும்போது எல்லோரும் அவசரப்பட்டதாகவும் அவர்களுக்குப் பெரிய மேனேஜர் நமக்கு ஒரு phone வேண்டும், phone டிபார்ட்மெண்டில் வெயிட்டிங் லிஸ்டில் 400 பேர் இருக்கின்றார்கள் என்று அவர் கூறியதாகவும் கேள்விப்பட்டோம். அந்த விபரம் அறிந்ததும் அவசரம் அடங்கிவிடும். விபரம் தெரியாததாலும், அனுபவம்

இல்லாததாலும், உடலில் நிதானம் இல்லாததாலும், மனம் எந்த விஷயத்தையும் ஊடாடி கவனிப்பதில்லை என்பதாலும், மேலும் பல காரணங்களாலும் அவசரம் ஏற்படுகிறது என்று தெரியும். அறிவும், அனுபவமும் அவசரத்திற்கு எதிரி. முனை மழுங்கிய அவசரத்தை முக்கால்வாசி ஆக்கிவிடும். இந்த முயற்சியில் ஒவ்வொரு கட்டத்திலும் சரணாகதி முடிவான பலனை முதலிலேயே தரும். சரணாகதியை மேற்கொள்ளும்போது பலன், சரணாகதி பலிப்பது. மற்றவை எல்லாம் பலனில்லை, மற்றவற்றை மனம் கருதக்கூடாது. சமர்ப்பணம் பலிப்பவர்களுக்குச் சமர்ப்பணத்தால் குறைகளை விலக்க முடியும்.

குறைகளின் பெயர் நீண்ட பட்டியல். பெருமை, பொறாமை, பயம், பேராசை, குறுக்கே பேசுவது என ஆயிரம் உண்டு. நாம் வீண் பெருமையை ஆராய்வோம். வீண் பெருமை தன் குறை என்று அறிந்து சமர்ப்பணத்தால் விலக்க ஒருவன் முயன்றால் கீழ்க்கண்டவை அவர் முன் படிப்படியாகத் தோன்றும்.

- நம்மையறியாமல் பெருமையை நம்முள் நாடுபவை நம்மை மீறி எழுவதைக் காணலாம். இதை மனம் கண்டு அதை ஏற்காமல் அதிலிருந்து விலகிச் சமர்ப்பணம் செய்தால் அதுவும் விலகும்.
- நாம் சும்மா இருக்கும்பொழுது நம் மனம் அடங்கி இருக்கும்பொழுது நாம் எதிலிருந்து விலகி இருக்கிறோமோ அதைச் செய்யும்படி பிறர் தூண்டுவர். இதுவரை நாம் செய்த காரியங்களை அழிக்கும் வழி, அவர் தூண்டுவதற்கு இரையாகி நாம் முன்போல் நடப்போம். அதைச் சமர்ப்பணம் செய்வது சிரமம். அதுவும் சமர்ப்பணம் ஆனபிறகு,
- எண்ணத்தின் பின்னிருந்து உணர்ச்சி உந்தும். இதைச் சமர்ப்பணம் செய்ய எண்ணத்திற்குண்டான மூன்று கட்டங்களை மீண்டும் பின்பற்றவேண்டும். அவற்றில் வெற்றி கண்டால்,
- அதேபோல் உணர்ச்சியின் அடியில் உடல் தானே இயங்குவது தெரியும். அதுபோல் இயங்கும்போது நாம் ''என்ன நடந்தது என்று தெரியவில்லை, போனேன், நண்பரைக் கூப்பிடக் கூடாது என்று முடிவு செய்த பிறகு என்னை அறியாமல் நான் phone-இல் அவரைக் கூப்பிட்டுப் பேசிக்கொண்டிருக்கும்போது என்னை மீறி நான் செயல்படுவது எனக்கு நினைவு வந்தது'' என்று கூறுகிறோம்.
- எண்ணமும், உணர்வும், உடல் அசைவுகளும் அடங்கியபின் சூட்சுமப் பகுதிகளில் அதே எண்ணம் எழும்.
- அதேபோல் உணர்விலும், உடலிலும் சூட்சுமத்தில் உந்தல்கள் எழும்.

ஓர் எண்ணத்திற்குப் பின்னால் நம்முள் (inner life) இத்தனைக் கட்டங்களில் எழுவனவற்றை காண்பது முதல் அவசியம். சமர்ப்பணத்தால் ஒவ்வொன்றாகக் களைவது அடுத்தது. சிரமப்பட்டு அகத்தில் வென்றதை அர்த்தமற்ற புறச்செயல் அழிப்பது மனித சுபாவம். நாம் யாரை phone-இல் கூப்பிடவேண்டாம் என்று இருக்கிறோமோ அவரிடம் நம் வீட்டில் மற்றொருவர் phone-இல் பேசுவார். நம்மைப் பேச அழைப்பார். நாம் சம்மதித்தால் இத்தனைக் கட்டுப்பாடும் வீண்போகும். சமர்ப்பணத்தில் நமக்கொரு பங்குண்டு என்றால் அது இதுதான். இதையும் அன்னை செய்யவேண்டும் என்று கூறுபவர் உண்டு. அது நம்மவருக்கே உரிய குதர்க்கவாதத்தின் உச்சகட்டம். அதைச் சொல்லும் உரிமை நமக்கில்லை. பெரிய மஹான்கள் அப்படிப் பேசி இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் செய்த சரணாகதியை (ஜீவனைச் சரணம் செய்து இருப்பார்கள்) நாம் செய்த பிறகு பேசலாம். அவரை அப்படிப் பேசும் உரிமை நமக்கு இல்லை. அப்படிப் பேசும்போது அப்பேச்சு இதுவரை செய்த முயற்சியை வீணடிக்கும்.

*தொடரும்....*

★ ★ ★

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

தம்பி - குழந்தையின் பெற்றோர்கள் பெரிய நேரம் வருவதை கவனமாகப் பார்க்க வேண்டும் அன்றோ?

அண்ணன் - விஷயம், இரகஸ்யம், கரு, முக்கியம் எல்லாம் உள்ள இடம் அதுதான்.

தம்பி - புதிய தொழில், product பொருள், முறை organisation எனப் புதியதாக வருவதை ஏற்பவர் அடுத்த தலைமுறையில் முதன்மையாக இருக்கிறார்கள்.

அண்ணன் - 1900இல் பாங்க் நமக்குப் புதியது. 1900இல் நெசவாலை புதியது. பாங்க் ஆரம்பித்த செட்டியார்கள், பஞ்சாலை ஆரம்பித்த நாயுடுமார்கள் இன்று தமிழ்நாட்டிலுள்ள பெரும் பணக்காரர்கள்.

தம்பி - சிறு அளவில் பார்த்தாலும் 1950இல் பஸ்ரூட், தியேட்டர், ஹோட்டல் பிரபலமாயின. இன்று எந்த ஊருக்குப் போனாலும் பெரும் பணக்காரர்கள் இந்தத் தொழிலைச் சார்ந்தவர்களே.

அண்ணன் - இப்புதிய தொழில்கள் கூலிக்காரனை முதலாளி ஆக்கியது அதிகம்.

தம்பி - ஆம், அது என்ன விஷயம்?

அண்ணன் - புதியது வந்தால் பணக்காரர்கள் அதை நாடுகிறார்கள். அவர்கள் தொழிலைப் பாராட்டுவதைவிட தாங்கள் ஜபர்தஸ்தைப் பாராட்டுவார்கள். கூலிக்காரன் அடியிலிருந்து வருவதால் தொழிலின் நுணுக்கத்தை அறிவான். பஸ் டிரைவர், கிளீனர், கண்டக்டர்கள் பஸ் முதலாளியானது அதிகம்.



தம்பி - உலகப் பெரு முதலாளி Ford போர்ட், இன்று உலகிலேயே பெரிய பணக்காரர் Bill Gates பில் கேட்ஸ், இவர்கள், அவர்கள் காலத்து product பொருளை ஒட்டி உயர்ந்தவர்கள். Rockefeller ராக்பெல்லரும் அப்படித்தான்.

அண்ணன் - புதியதை ஏற்றுப் பாராட்டுபவர் உலகில் முதன்மையாக வரும் வாய்ப்பு அதிகம்.

தம்பி - இன்று அப்படி முதன்மையானது எது?

அண்ணன் - ஆயிரம் விஷயங்களைச் சொல்லலாம். Product பொருள் எனில் கம்ப்யூட்டரையும், Internet இன்டர் நெட்டையும் கூறலாம். விஷயம் எனில் கல்வியைக் கூறலாம். அரசியல் எனில் ஜனநாயகத்தைக் கூறலாம். எல்லாவற்றையும் தன்னுட்கொண்டது அன்னை ஜீவியம்.

தம்பி - இக்குழந்தை விஷயத்தில் நீங்கள் சொல்வதுபோல் முன்னோடி விஷயமான படிப்பும், அன்னையும் சேர்ந்து வருவதால் நிச்சயம் இது உலகப் பிரசித்தி பெறும்.

அண்ணன் - குழந்தை Internetஇல் படிப்பைத் தொடர்ந்தால் நல்லது.

தம்பி - அன்னையல்லவா முக்கியம்.

அண்ணன் - அன்னையில்லை எனில் ஒன்றும் இல்லை.

தம்பி - எனக்கு இக்குழந்தை உலகப் பிரசித்தி பெற வேண்டும் என்று அவா.

அண்ணன் - அவா இருந்தால் பலிக்காது.

தம்பி – பின்னே, என்ன இருக்க வேண்டும்?

அண்ணன் – ஆர்வமிருக்க வேண்டும்.

தம்பி – சரி, இக்குழந்தை விஷயத்தைப் பூர்த்தி செய்ய நான் என்ன செய்யலாம்?

அண்ணன் – நீ எதுவும் செய்யக்கூடாது. உனக்குரியது silent will மட்டும்தான். செய்ய வேண்டியது எல்லாம் பெற்றோர்தாம்.

தம்பி – பெற்றோர் இதைப் பூர்த்தி செய்ய நான் என்ன செய்ய முடியும்?

அண்ணன் – Silent gratitude மௌனமாக நன்றியைச் செலுத்தினால் போதும்.

தம்பி – செயலில் என்ன செய்யலாம்?

அண்ணன் – உன்னுடைய காரியத்தில் அன்னையைக் கண்டால் நல்லது.

தம்பி – என் கம்பனியைப் பெரியதாக்க வேண்டுமா?

அண்ணன் – உன் கம்பனியை முதன்மையாகச் செய்தால் உன் நல்லெண்ணம் குழந்தையை முதன்மையாக்கும்.

தம்பி – பெற்றோரிடம் நான் எதுவுமே சொல்லக் கூடாதா?

அண்ணன் – பெற்றோரிடம் விஷயத்தைச் சொல்லலாம். ஒரு முறைக்கு மேல் வலியுறுத்திச் சொல்லக் கூடாது.

தம்பி – நல்லெண்ணத்திற்கு அந்த சக்தியுண்டா?

அண்ணன் – நல்லெண்ணம் உயிரைக் காப்பாற்றும். கெட்ட எண்ணம் உயிரை எடுக்கும்.



தம்பி – ஓர் அன்பருக்கு 1 வருஷமாக உடல் நலம் குன்றியது. பிறகு உடல் நலம் தேறியது. அவருடைய ஆதரவில் வாழ்பவர் ஒருவருக்குக் கெட்ட எண்ணம் ஏற்பட்டது. அன்பர் சூழலில் ஆபத்துத் தோன்றியது. சுமார் 3, 4 மாதம் சூழல் கறுத்திருந்தது. நிலைமை மோசமானபின் வழக்கமாக அவர் சோதனை செய்யும் முறைகளைக் கையாண்டார். இரண்டு அறிகுறிகள் சூழல் உணர்த்துவதை வலியுறுத்தி ஆமோதித்தன. அப்படியானால் அதிக நாள் தாங்காது என அன்பருக்குப்பட்டது. ஒரே நாளில் கெட்ட எண்ணம் உள்ளவரை விலக்கி நல்லெண்ணம் உள்ளவரின் ஆதரவை நாடினார். சூழல் மறுநாள் காலையில் பளிச்சென்று மாறியது. ஆபத்து விலகியது.

அண்ணன் – நம்முடைய குடும்பங்களில் உள்ள பெரிய பிரச்சினையில் உறவுக்காகக் கெட்ட எண்ணத்தை ஏற்கிறோம். அப்பிரச்சினை தீராது. பையனுக்குப் பெரிய உத்தியோகம் வந்தால் தகப்பனாருக்குப் பொறாமை. பெண்ணுக்கு நல்ல வரன் அமைந்தால் அக்காளுக்குப் பொறாமை, அம்மாவுக்கும் பிடிப்பதில்லை.

தம்பி – நல்லெண்ணம் உள்ளவர் கண்ணில் படுவதில்லை. அதனால் அப்பிரச்சினை எழாது!

அண்ணன் – நல்லெண்ணம் உள்ள அன்பர் என நாம் அறிய வேண்டுமானால், அவர் அன்னையிடம் வந்தபின் வானுயர வளர்ந்திருப்பார்.

தம்பி – கெட்ட எண்ணக்காரரும் அப்படி வளர்ந்துள்ளாரே? நல்ல எண்ணம் இல்லாதவரும் அளவுகடந்து வளர்ந்திருப்பதைக் காண்கிறோமே?

அண்ணன் - மனிதனைப் புரிந்து கொள்வது கடினம். இந்தப் பெற்றோர் சேவை உணர்வுள்ளவரானதால் அப்பிரச்சினை இங்கு எழாது.

அண்ணன் - அன்பரொருவர் சில ஆண்டுகளில் நல்லெண்ணத்தின் அன்புப் பரிசாகக் கொஞ்சம் கொஞ்சமாக *29* லட்சம் இனாம் பெற்றார். அன்னையைப் பற்றிப் பேசும்பொழுது இதைப் பெற்ற அன்பர் ''என் வாழ்வில் எதுவுமே நடக்கவில்லையே'' என்றார். கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு விஷயம் தெரியாது. கொடுத்தவரும் கேட்டுக் கொண்டிருந்தார்! அதுதான் நல்லெண்ணம்!

தம்பி - ஓர் அன்பருடைய நல்லெண்ணம், மற்றொருவருக்கு உலகில் பிரபலம் கொடுத்ததையும் நாம் அறிவோம்.

அண்ணன் - பெற்றுக் கொண்டவருக்கு அன்பருடைய அக்கறையைப் பற்றித் தெரியாது.

தம்பி - நல்லெண்ணத்திற்கு சக்தியுண்டு என்பது புதியது. நாம் இன்று நம் காரியங்களை வெற்றிகரமாக முடிக்க எப்படி நடக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்று இக்குழந்தை மூலம் சொல்ல முடியுமா?

அண்ணன் - சொல்லலாம். சற்று நுணுக்கமாகக் கேட்டுக் கொள்ள வேண்டும். செயல்படும்பொழுது மயிரிழை தவறாமல் நடக்க வேண்டும். நான் தத்துவத்தில் ஆரம்பித்து, நடைமுறைவரை சொல்கிறேன்.

*தொடரும்.....*

☆ ☆ ☆





# இலட்சியத் திருமணம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

உன் பேரென்ன? சொன்னால் ஆன்ட்டி சாக்லேட் தருவேன் என்று அவனருகில் வந்து கன்னத்தைச் செல்லமாகத் தொட்டாள். வெயிலால் வாடிய பூச்செடி மழையின் குளுமையில் பசுமை கொட்டியதைப்போல் அன்பான அவள் தீண்டலில் சிறுவன் மலர்ந்தான். அர்விந்த் என்றான் மழலையாக. ஆகா! எத்தனை அழகான பெயர். இந்தா சாக்லேட் என்று தியானமையத்தில் பிரசாதமாகப் பெற்றதை இந்தக் குழந்தைத் தெய்வத்திற்கு நிவேதனமாக்கிவிட்டாள். அவனை அன்புடன் தூக்கிக் கொண்டு கண்ணை மறைக்கும் முடிக்கற்றைகளை ஒதுக்கிவிட்டு, செல்லமாய்க் கன்னத்தில் முத்தமிட்டாள். "கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி" என்று பாரதி அனுபவித்துத்தான் பாடி இருக்கிறார் என்று எண்ணமிட்டாள். இந்த அன்பில் நனைந்து மேலும் மலர்ச்சி பெற்றான் சிறுவன். அப்போதுதான் பாட்டியின் கையைப் பிடித்துக் கொண்டு வரும் சிறுமியின் முகம் வாடுவதைக் கவனித்தாள். இரண்டு குழந்தைகளிருக்குமிடத்தில் ஒரு குழந்தைக்குச் சாக்லேட் கொடுத்துக் கொஞ்சியது மற்ற குழந்தையைப் பாதிக்குமே என்று தன் அறியாமையை எண்ணி வெட்கி, பாப்பா! உன் பேரென்ன? உனக்கு ஆண்ட்டி நாளை சாக்லேட் தருவேன் என்று மன்னிப்பு வேண்டும் வகையில் கூறினாள். தன்னையும் ஆண்ட்டி புறக்கணிக்கவில்லை என்று முகம் மலர்ந்த சிறுமி ஜனனி என்று தன் பெயரைக் கூறினாள். ஓகோ! இதுவும் அழகான பேர்தான் என்று கன்னத்தில் செல்லமாகத் தட்டிக் கூறவும் சிறுமிக்கு மகிழ்ச்சி கூடிற்று. பாட்டியின் கையில் இருந்த பிடியை விட்டுவிட்டு இவளைப் பற்றிக்கொண்டாள்.

சரிதான், இரண்டு பேரும் அவங்களைப் பிடிச்சிட்டு என்னை விட்டுட்டீங்களா? பாட்டிக்குத்தான் இப்போ ஆதரவில்லை, என்று விளையாட்டாகப் பேசினாள் பாட்டி.

ஏன் பாட்டி அப்படிச் சொல்கிறீர்கள். நாம் எல்லோருமே அன்னையின் ஆதரவு பெற்றவர்கள் தாமே? என்று பாட்டிக்கும் ஆதரவு கூறினாள்.

எத்தனை அழகாகப் பேசுகிறாய்? உன் பேரென்ன? என்றாள் பாட்டி.

உமாமகேசுவரி என்றாள். பேரும் அழகாய்த்தானிருக்கிறது. உலகையீன்றவளின் பேரல்லவா உன் பேர்? அதனால்தான் இத்தனை ஆதரவாய்ப் பேசுகிறாய்? என்று பாராட்டும் தோரணையில் கூறினாள்.

எந்தத் தெருவிலிருந்து வருகிறாய்? என்றாள் பாட்டி. பக்கத்தில் பாரதித் தெருவிலிருந்துதான் வருகிறேன் என்றாள்.

அட! நாங்களும் அங்கு தானிருக்கிறோம். மேலண்டை கோடி வீடு என்றாள் பாட்டி.

அப்படியா நான் அந்த வழியாகத்தான் ஆபீஸ் போவேன். இதற்கு முன் தியான மையத்தில் கூட உங்களைப் பார்க்கவில்லையே என்றாள் உமா. நாங்கள் இந்த ஊருக்கு வந்தே ஒரு மாதம்தான் ஆகிறது. இப்போதுதான் முதன் முறையாக இங்கு வந்தோம் என்றாள் பாட்டி. நீங்கள் தனியாக இவர்களை அழைத்து வந்தீர்களே. உங்கள் மகனோ, மகளோ வரவில்லையா என்றாள். சற்று நேரம் ஆடிப்போனாள் பாட்டி.

பாட்டியின் மருமகளும், பெயர்த்தியுமான இந்தக் குழந்தைகளின் தாய் அர்விந்தைப் பெற்றபோது பிரசவத்தில் இறந்து போனாளாம். அது முதல் இவர்கள் தந்தை, அதாவது பாட்டியின் மகன் வீட்டில் ஒட்டுதலில்லாமல் அலைந்தானாம். அவன் மெடிகல்



ரெப்ரசென்டேட்டிவ் வேறு. அவனுக்குக் குடும்பத்தில் பிடிப்பு ஏற்படுத்த மீண்டும் திருமணத்திற்கு முயன்ற போது அவனே ஒரு பெண்ணைப் பதிவுத் திருமணம் செய்து வந்தானாம். அவளோ இவன் தனக்குத் திருமணமானதையும், குழந்தைகள் இருப்பதையும் கூறவில்லை, ஆதலால் இங்கு வர மறுத்துப் போய்விட்டாளாம். அவள் அழகு, பணம் யாவற்றிலும் மயங்கி அவன் பிள்ளைகளைப் பார்க்கவும் வருவதில்லையாம். குழந்தைகள் தாய்ப் பாசம், தந்தை பாசம் காணாது ஏங்கிப் போனார்களாம். அனாதையாய் தன்னிடத்தில் வளர்ந்த பெண் வயிற்றுப் பேத்திதானாம் இந்தக் குழந்தைகளின் தாய். எனவே குழந்தைகளுக்குப் பாட்டி தாத்தாதான் பொறுப்பு என்றாயிற்று. வேறு வழியில்லை. பாசம் ஒரு புறம், தள்ளாமை ஒரு புறம், பாதிக்கப்பட்ட நோதல் ஒருபுறம். இந்தப் பரிதாபக் கதையைக் கேட்டவுடன்தான் இந்தக் குழந்தைகள் தன்னை ஏன் அப்படிப் பற்றிக் கொண்டார்கள் என்று புரிந்தது. அவர்கள் தாயன்பிற்கு ஏங்குவது தெரிந்தது.

சற்று நேரத்தில் உமா குழந்தைகளுடன் வந்தாள். இருவரும் சமர்த்தாக உள்ளே போய்ப் பாட்டியைத் தொந்திரவு செய்யாமல் டிபன் சாப்பிட்டுவிட்டு முகம் கழுவிக் கொண்டு, ஹோம் ஒர்க் செய்யவேண்டும். 1 மணி நேரத்தில் ஆன்ட்டி வருவேன் என்று குழந்தைகளை ஒப்படைத்துச் சென்றாள்.

வீட்டிற்குள் நுழைந்த உமாவைக் கண்டதும் என்ன உமா இன்று தாமதம் என்றாள் அம்மா. இவள் பெற்றோர்க்கு இவள் ஒரே பெண். 25 வயதாகிறது. கல்யாணச் சந்தைக்கு வந்தாகிவிட்டாள். நல்ல வரன் கிடைக்கவில்லையே, நாளாகிறதே என்ற கவலை பெற்றோர்களுக்கு. இவள் எதற்கும் கவலைப்படுவதில்லை. ஆபீஸ் வேலையில் நல்ல கவனம் செலுத்தி அங்கு நல்ல பெயர். ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் மட்டும் காலை எண்ணெய்க் குளியல், துணி துவைத்தல், மதியம் துணிகளுக்குப் பெட்டி போடும் செயல், மாலை தியானமையம். சிறிது நேரம் கிடைத்தாலும் அன்னையின் மொழியமுதம் படிப்பது. சமயம் வாய்த்தபோது இயன்ற உதவிகளைப் பிறர்க்குச் செய்வது. அதன் பயன்களை, விளைவுகளை எண்ணிப்

பார்க்க மாட்டாள். இந்த நிலையில்தான் பாட்டியின் பேரக் குழந்தைகளுடன் நட்பு ஏற்பட்டது.

*தொடரும்.....*

☆ ☆ ☆

## சொசைட்டியின் வெளியீடுகள்

கர்மயோகியின் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | மனம் - ஜீவனின் முக்கிய கரணம் | ரூ. 20 |
| 3. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 4. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 5. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 6. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 7. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 40 |
| 8. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 9. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 10. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |
| 11. | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.100 |
| 12. | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. 20 |
| 13. | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. 20 |
| 14. | யோக வாழ்க்கை விளக்கம் - I | ரூ. 80 |
| 15. | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. 60 |
| 16. | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.150 |
| 17. | வாழ்வின் அடிச்சுவடுகள் | ரூ. 60 |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

## விளம்பரம்

ஒரு பத்திரிக்கையில் விளம்பரம் சேகரம் செய்யும் இலாகாவில் வேலை செய்யும் அன்பர் ஒருவர் பொதுவாக அன்னையை நினைத்துத் தம் வேலையை ஓரளவு சிறப்பாகச் செய்கிறார். சற்று அதிகப் பலன் பெற நினைத்து அன்னையை அழைத்தால் பலன் குறைகிறது. அவர் இலாக்காவில் 7, 8 பேருண்டு. மாதம் 5 கோடி முதல் 8 கோடிவரை விளம்பரம் இருக்கும். தமக்கு விளம்பரம் பேரில் கமிஷன் உண்டு. பத்திரிக்கைக்கு இதர பத்திரிக்கைகளுடன் விளம்பர விஷயத்தில் கூட்டுண்டு. அன்பர் அன்னை பக்தர். அன்னை முழுவதும் பலிப்பது இவர் அனுபவம், முழுவதும் பலிக்காமல் போவதும் இவருடைய அனுபவம். நல்லது செய்ய முனைந்தால் கெட்டது நடப்பதும் இவருடைய இராசி. பிறந்த நாள் வருகிறது. எத்தனையோ பிறந்த நாளில் இவருக்குத் தவறான அனுபவம் உண்டு. உடனிருப்பவர்கட்குச் சிரமம் வந்ததும் இவர் அறிந்ததே. இந்தப் பிறந்த நாள் நல்லபடியாகப் போனால் போதும் என்பதுபோல் ஓரிரு வாரங்கள் கழிந்தன. பிறந்த நாள் சமயம் ஆழ்ந்து அன்னையை அழைத்தபடியிருந்தார். பிறந்த நாள் நல்ல முறையில் கழிந்தது. இரு நாள் கழித்து ஆபீசுக்கு இவருடைய clientமூலம் ஒரு விளம்பரம், இவர் தேடிப் போகாமல் வந்தது. ½ பக்கம், 1 பக்கத்திற்குச் செய்வது பெரிய முயற்சி. 28 பக்கம் தானே வேறொரு பத்திரிக்கைமூலம் வந்துள்ளது. 1 கோடியே 68 இலட்சம் பெறும். பிறந்தநாள் பரிசாக ஏற்றுத் திருப்திப்பட்டார். அன்று மாலை வந்த விளம்பரம் ரத்தாகிவிட்டது. தாம் திருப்திப்பட்டது தவறு, நன்றியுணர்வில்லை என அறிந்தார். மீண்டும் அன்னையை அழைத்தார். அழைப்புக்கு ஜீவனில்லை. மனம் மாற மறுத்தது. 2 நாளைக்குப்பின் அதே விளம்பரம் மீண்டும் 28 பக்க அளவில் வந்தது. போட்டியால் 1.68 கோடி 50 இலட்சமாயிற்று!

**நிறைவுக்கு நிறைந்த பலன்.**
**நன்றியற்ற திருப்திக்கு வந்ததும் போகும்.**
**ஜீவனற்ற அழைப்பு இழந்ததை சிறியதாக்கிப் பெற்றுத் தரும்.**

★ ★ ★

## சூட்சும அறிகுறி

அன்பர் நண்பரிடம் வந்து கன்வாருடன் போனில் பேசினேன் என்றார். 1700 கோடி கம்பனி முதலாளி கன்வார். சுமார் 4 ஆண்டுகட்கு முன் அவர் அன்பரைப் பற்றிக் கேள்விப்பட்டு அழைப்பு விடுத்திருந்தார். தொழிலில் clientஐப் பார்க்க நாமே நம் செலவில் போவது வழக்கம். பெரு முதலாளிகளைக் காண்பது கடினம். இந்த முதலாளி அன்பருக்கு விமான டிக்கட் வாங்கி அனுப்பி வரச் சொல்லியிருந்தார். இது வழக்கத்திற்கு மாறான வழக்கம். அன்பர் முதலாளியைச் சந்தித்தார். அன்பருடன் அவருடைய பார்ட்னரும் வந்திருந்தார். தொழில் விஷயமாக 3½ மணி நேரம் அன்பர் பேசும்பொழுது, முதலாளி தம் முக்கிய மானேஜர்களை அழைத்து கேட்டுக்கொள்ளச் சொன்னார். அன்பரும், அவர் பார்ட்னரும் பேசியது முதலாளியையும், அவர் ஆபீசர்களையும் கவர்ந்தது.

**இதுவரை இப்படி எங்களுக்குத் தொழிலை எடுத்து எவரும் விளக்கியதில்லை எனப் பாராட்டினர். முதலாளி, "எல்லாத் தொழில் இரகஸ்யங்களையும் எங்களுக்குச் சொல்லிவிட்டீர்களே" என வியந்தார்.**

முதலாளி அன்று அமெரிக்கா போவதால் உடனே கான்ட்ராக்ட் கையெழுத்திட அவசரப்பட்டார். அன்பர் அவசரப்படக்கூடாது. அமெரிக்காவிலிருந்து திரும்பியபின் எழுதலாம் என்றார். திரும்பியபின் முதலாளி அன்பரை அழைக்கவில்லை! இது பெரிய அனுபவம்.

இன்று கன்வாரிடம் பேசினேன் என்றவுடன் நண்பர் கன்வாரை நினைத்தார். அன்பர், "அந்தக் கன்வாரில்லை. இவர் பத்திரிக்கை ஆசிரியர்" என விளக்கினார். 10 நாள் கழித்து கன்வாருடைய தகப்பனார் காலமானதாகக் கன்வார் கையெழுத்திட்ட விளம்பரம் பத்திரிக்கையில் வந்தது. முதலாளியைவிட அவர் தகப்பனார் முக்கியமானவர், இந்திராகாந்தியின் நெருங்கிய நண்பர்.

**10 நாள் கழித்து வர இருக்கும் செய்தி இன்று வாய் தவறுதலாக நமக்கு அறிவுறுத்துவது (subtle Life) சூட்சும அறிகுறி.**

★ ★ ★